உ

ஓம்

ஸ்ரீ வீரட்டேசாய பரப்பிர்ம்மணேம:ந

திருவிற்குடி வீரட்டத்தலபுராண வசனம்

என்னும்

# ஜலந்தராசுரன் வதைச்சுருக்கம்.

இஃது

பழய ஏட்டுப்பிரதிகளில் வடமொழியிலிருந்ததை

மொழிபெயர்த்தது.

திருவாரூர்,

**T. S. வெங்கிட்டராமய்யர் அவர்களால்**

இயற்றப்பட்டு,

தஞ்சை:

கல்யாணசுந்தரம் பவர் பிரின்டிங் ஆபீஸில்

பதிப்பிக்கப்பட்டது.

*All Rights Reserved.*

விலை அணு 2.] 1907. [தபாற்கூலி தனி.

# முகவுரை.

இச்சரித்திரம் பதினெண்புராணங்களில் பத்மபுராணத்தில் ஒன்பது அத்தியாயங்களிலும், ஸ்காந்தபுராணத்தில் சங்கரசம்கிதையில் சிவரகசியகண்டம் தக்ஷகாண்டத்தில் இரண்டு அத்தியாயங்களிலும், பவிஷ்யோத்திர புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. சைவசமயகுரவர் நால்வருள் ஸ்ரீகந்தபிரானே திருவவதாரஞ் செய்து அம்பிகையின் திருமுலைப்பாலுண்டு அதிபாலியத்திலேயே ஞானம்பெற்று பலவற்புதங்களைச் செய்தருளிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அவர்களால் ஒரு பதிகம் (பத்துபாடல்கள்) பாடப்பெற்றதும், திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய க்ஷேத்திரக்கோவையிற் சேர்க்கப்பட்டும் நன்னிலத்து பெருங்கோயில் என்று சைவசமய ஆசாரியர்களால் பாடப்பெற்ற திருநன்னிலத்து ஸ்தலபுராணத்திலும் திருவீழிமழலை க்ஷேத்திர மான்மீயத்திலும் காஞ்சிபுரத்தலபுராணத்திலும் திருகூடம[illegible]னச்சொல்லும், திருக்குற்றாலத்தலபுராணத்திலும் இச்சரித்திரத்திற்குப்பல ஆதாரங்களிருக்கின்றனவென்பது முறையே [illegible]கும். ஹற்றிவம்சம் தேவிமாகாத்ப்யம் முதலிய பல இதர கிரந்தங்களிலும் இச்சரிதத்திர்க்கு ஆ[illegible]ரங்களிருக்கின்றன. இச்சரிதம் அதிடம்பத்துடனும் ஆடம்பரத்துடனும் சுவாமிதரிசனம் செய்ய ஆலயங்கட்குப்போதல் கூடாதென்பதையும் அவ்வாறு செய்ததேவேந்திரன் அடைந்த கஷ்டத்தையும் நன்குவிளக்குகிறது. இன்னமும் தான் எவ்வளவு உயர்பதவியிலிருந்தாலும், கற்புடைய பிறமகளிர்களைக் கனவிலும் நினைத்தல் கூடாதென்பதையும் அவ்வாறுசெய்த ஸ்ரீவிட்டுணுவுக்குண்டான மானிட ஜென்மத்தையும், பிறர்மனையாளை யிச்சித்தவன் தன் மனையாளையும் சில சமயங்களிலிழக்கும்படி நேரிடுமென்பது முதலிய பலபடிப்பினைகளை தெரிவிப்பதோடு மகாவிட்டுணுவின்வலக்கையை அலங்கரிக்கும்சுதர்சனத்தாழ்வார்உண்டானஸ்தலமாகவும் துளசிதேவி இப்பூவுலகிற்குவந்ததின்காரணத்தையும் தெரிவிப்பதால்இத்தலபுராணமானதுமற்ற யஸ்தலபுராணங்களைக்காட்டிலும்மேன்மை பெற்றதென்பதற்கு ஐயமில்லை. இன்னமும் மேற்சொல்லிய நீதிகளை பெறவேண்டிய ஒவ்வொரு ஆரிய சகோதரர்களுக்குமின்றியமையாத புண்ணிய சரித்திரமாகவிருக்கிறது. இப்புத்தகமானது சிதிலமாய்ப்போன பல ஏட்டுப்பிரதிகளிருந்தவைகளை ஒருங்கு சேர்த்து அநேக வித்வான்களின் பேருதவியின்பேரில் மொழிபெயர்க்கப்பட்டு எழுதப்பட்டுளது.

ஓம்

ஶ்ரீ கணேசாயநம :

# திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

## தேவார திருப்பதிகங்கள்

## திருவிற்குடி வீரட்டானம்.

பண்ணட்டராகம்

ஶ்ரீ வீரட்டேசாயநம :

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர்வான மாமதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையதேறுமம்மான மர்ந்தினி துறைவிற்குடி வீரட்ட
மடியராகி நின்றேத்தவல்லார் தமையருவினை யடையாவே (1)

களங்கொள் கொன்றையுங்கதிர் விரிமதியமுங்கடிகமழ் சடைக்கேற்றி
யுளங்கொள்பத்தர் பாலருளிய பெருமையர் பொருகரியுரி போர்த்து
விளங்குமேனிய ரெம்பெருமா னுறை விற்குடிவீரட்டம்
வளங்கொண் மாமலரா னினைந்தேத்துவார் வருத்தமதறியாரே (2)

கரியகண்டத்தர் வெளியவெண்பொடி யணிமார் பினர்வலங்கையி
லெரியர் புன்சடையிடம் பெறக்காட்டகத்தாடிய வேடத்தர்
விரியுமாமலர்ப் பொய்கை சூழ்மதுமலிவிற்குடி வீரட்டம்
பிரிவிலாதவர் பெருந்தவத்தோ ரெனப்பேணுவருலகத்தே (3)

தஞ்சேர்ந்திசை பாடலராடலர் பொலிதர நலமார்ந்த
தஞ்சேரிணைச்சிலம் பினர்கலம் பெறுகடலெழு விடமுண்டார்
வேதமோதிய நாவுடையானிடம் விற்குடிவீரட்டஞ்
தெருநெஞ்சினர்க்கல்லலதுண்டோ பிணிதீவினைகெடுமாறே (4)

டியவேற்றினர் கனலன மேனியா ரலெழவூர் மூன்று
டியமால் வரைகால்வளைத்தான் றனதடியவர் மேலுள்ள
வடியவல் வினைவீட்டுவிப்பானுறை விற்குடிவீரட்டம்
டியதாகவே பரவுமின்பரவினாற் பற்றறுமருநோயே. (5)

இம்மாநிலத்திற் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் அனந்தங்கோடியாம் அதில் தலம், தீர்த்தம், மூர்த்தி மூன்றினுஞ் சிறந்தது பதினான்கு அவற்றினுள் ஒன்றானதும் பரமகருணாமூர்த்தியாகிய சிவபிரான் வீரஞ்செலுத்திய தலங்கள் எட்டினுள் ஒன்றானதும்இத்தலம் ஒன்றே. அவைகள் ஒவ்வொன்றிலும் பரமசிவன்தனக்கு ப்ரீம்பாயுள்ளவர்களை சம்ஹரித்தது. இத்தலத்திலோ இந்திரன் முதலிய தேவர்களின் கர்வங்களைவாட்ட தனது அம்சத்தினாலேயே ஓரரக்கனை சிருட்டித்து அவனால் விண்ணவர்களின் கர்வங்களை ஒட்டிய பின்னர் அவ்வரக்கனை தானே ஓர் லீலையாகக்கொன்றதால் இத்தலம் மற்றைய வீரட்டங்களிலுஞ் சிறந்ததென்பதற்கையமில்லை. நினைத்தவருக்கு அண்ணாமலையும்,தரிசித்தவருக்குத் தில்லையும், பிறந்தவருக்குத் திருவாரூரும் இறந்தவருக்குவாரணாசியும் முக்தி கொடுக்குந் திறமுடையது இவ்விற்குடிவீரட்டமோ மேற்சொல்லிய நால்வருக்கும் முக்திதரும் வரமுடையது. மற்றைய தலங்களைப்போல ஆரிடம்,மானிடம், தேவம், அசுரம், ராக்ஷதம் முதலிய பிரதிஷ்டை லிங்கங்களைப்போலல்லதுதானாயுண்டானது, சுயம்புலிங்கம். மதுரையிலுள்ளது சைவலிங்கம்,அருணாசலத்திலுள்ளது போகலிங்கம், திருக்குற்றாலத்துள்ளது ரகஸ்யலிங்கம்,இத்தலத்திலுள்ளது பராபரலிங்கம். சிவபிரான், கொன்றைமலரில் இமைப்பொழுதும், வில்வத்தில் நொடிப்பொழுதும், தும்பையில் மாத்திரைப்பொழுதும், மரைமலரில் கணப்பொழுதும்,லிங்கங்களில் ஒருநாழிகை பொழுதும், தங்கியிருப்பார். இத்தலத்திலோ விட்டுணுவின் வேண்டுகோளின்படி சதாகாலமும் வசித்துவருகிறார். சைவாகமங்களிற்சொல்லியவாறு, சங்கம், சதுரம், கூர்மம், பதுமம், சக்கரம் முதலியவைகள் உத்தமாலயங்கள், அவைகளில் இத்தலத்தில் சிவபிரான் தங்கியது சதுரக்கோயில் இத்தலத்தில் ஐந்து தீர்த்தங்களுள்ளது ஒவ்வொன்றும் கங்காதிபுண்ணிய தீர்த்தங்களைவிட சிறந்தது. இந்திரன், நான்முகன் முதலியவானவர், பரசுராமன், அகத்தியர், தூர்வாசர் முதலிரிஷிசிரேஷ்டர்கள், தசரதராமன், பாண்டவரின் மூன்றாவதான பார்த்தன், முசுகுந்தன் முதலிய பூவுலக மன்னர்கள், பாணா[illegible] முதலிய வரக்கர்கள், பராசக்தி, பிருந்தை, அகல்லியை, விண்ணவர் குருவின்மனைவி (தாரை) முதலிய மடந்தையர் அநேகம் [illegible]றகால் ஐந்துக்கள், முதலானவர்கள் இத்தலத்தில் அனேகநாள் வசித்து விரும்பிய யாவையும்

ஓம்

ஸ்ரீ கணேசாயநம :

# திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

## தேவார திருப்பதிகங்கள்

## திருவிற்குடிவீரட்டானம்.

பண்ணட்டராகம்

ஸ்ரீ வீரட்டேசாயநம :

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர் வான மாமதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையதேறுமம்மான மர்ந்தினி துறைவிற்குடி வீரட்ட
மடியராகி நின்றேத்தவல்லார் தமையருவினை யடையாவே (1)

களங்கொள் கொன்றையுங்கதிர் விரிமதியமுங்கடிகமழ் சடைக்கேற்றி
யுளங்கொள்பத்தர் பாலருளிய பெருமையர் பொருகரியுரி போர்த்து
விளங்குமேனிய ரெம்பெருமானுறை விற்குடிவீரட்டம்
வளங்கொண் மாமலரா னினைந்தேத்துவார் வருத்தமதறியாரே (2)

கரியகண்டத்தர் வெளியவெண்பொடி யணிமார் பினர்வலங்கையி
லெரியர் புன்சடையிடம் பெறக்காட்டகத்தாடிய வேடத்தர்
விரியுமாமலர்ப் பொய்கை சூழ்மதுமலிவிற்குடி வீரட்டம்
பிரிவிலாதவர் பெருந்தவத்தோ ரெனப்பேணுவருலகத்தே (3)

கீதஞ்சேர்ந்திசை பாடலராடலர் பொலிதர நலமார்ந்த
பாதஞ்சேரிணைச்சிலம் பினர்கலம் பெறுகடலெழு விடமுண்டார்
வேதமோதிய நாவுடையானிடம் விற்குடிவீரட்டஞ்
சேருநெஞ்சினர்க்கல்லலதுண்டோ பிணிதீவினைகெடுமாறே (4)

கடியவேற்றினர் கனலன மேனியரனலெழவூர் மூன்று
மிடியமால் வரைகால்வளைத்தான் றனதடியவர் மேலுள்ள
கொடியவல் வினைவீட்டுவிப்பானுறை விற்குடிவீரட்டம்
படியதாகவே பரவுமின்பரவினாற் பற்றறுமருநோயே, (5)

பெற்றிருக்கின்றனர். அவ்வாறே அங்குள்ள தீர்த்தங்களிலா வநேகர் பெரும் பெரும் பேறுகள் பல பெற்றிருக்கின்றனர். இம்மூர்த்தியை தரிசித்தவர்கள் சாரூபம் பெற்று விடுவதால் இத்தலம் * தரிசன வேதியாகும். இத்தலத்தில் வசிப்பவர் பேரும்பேறு பெறுவதால் இத்தலம் ‡ பரிசன வேதியாகும். இத்தலத்தைச்சுற்றி மூன்று ⁂ குரோசத்துக்குள் வசிப்பவர்கள்வானவரும் வணங்கும் தவப்பெருக் குடையவர்களாவர். இத்தலத்தில் முளைக்கும் புற்பூண்டுகளும் நற்கதியடைகின்றன வெனில் இத்தலமகிமை சொல்லத்திறமோ? தீர்த்தவிசேடம், மூர்த்தி விசேடம் தலவிசேடம், நூறப்பயனுரைத்த வத்தியாயமிவைகள்விரி விஞ்சி விடுக்கப்பட்டன. கார்த்திகை, வைகாசி இம்மாதங்களில் இத்தலத்தில் வசித்தல், நீராடுதல் பூஜித்தல் இவைகள் [illegible] னைத் தருமென்று புராணம் கூறுகிறது. இவற்றையெல்லாம் பற்றி அதிகம் சொல்லில் விரியுமாதலால் இத்துடன் [illegible]னேன். இத்தலமகிமையை இத்துடன் அண்டித்திருக்கும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்களிலேயே [illegible]விளங்கும். இச்சிறு புத்தகத்தில் குற்றங்குணங்களிருந்தாலும் பெற்றதாய் தனதுற்ற மதலையின் சொல்லெனவெண்ணி மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

---

* தன்னைக்கண்டவர்களைத் தன்மயமாக்குவது.

‡ தன்னைத்தொட்டவர்களை தன் மயமாக்குவது.

⁂ கூப்பிடுதூரம், இப்பொழுது ஒரு இங்கிலீஷ் மைல் தூரமாகும்.

# நூன்முகம்.

நைமிசாரண்ய வாஸிகளான சௌனகாதி முனிவர்கள் குருக்ஷேத்திரமென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஒருங்கு கூடி புராணம் சொல்லுவதில் மிக்க சிரேஷ்டரான சூதபுராணிகரைப் பார்த்து தாங்கள் இதுவரையில் திருவாய்மலர்ந்தருளிய சிவபிரானது அநேகமான சரித்திரங்களையும், லீலாவிநோதங்களையும் கேட்டுமிக்கவானந்தமடைந்தோம். கேட்க கேட்கத் தெவிட்டாத ஆனந்தமாயிருக்கிறது. ஆதலால் பரமகருணா மூர்த்தியான சிவபெருமான் அவரது அட்ட வீரட்டத்தில் நடத்திய வீரச் செய்கைகளையும், அவற்றில் ஜலந்தரன்முதலிய கொடிய அரக்கர்களை லீலையாகக் கொன்றதையும் அறைதல் வேண்டுமெனநற்றவச்சூதர் சொல்லிவருகிறார். கேளுங்கள் சௌனகாதி முனிவர்களே. மகாபுண்ணிய நதியாகிய காவிரிநதிபாயப்பெற்றுள்ள சோணாட்டில் புண்ணிய க்ஷேத்திரங்களாயுள்ள பல சிவ க்ஷேத்திரங்களில் முதன்மை பெற்றதும் சிவபெருமான் § மைவார்குழலியம்மையோடுமகிழ்வுற்றதும் * அட்டவீரட்டத்துள் ஐந்தாவதாவதும் விற்குடி வீரட்டம் என்னுமோர் திவ்வியக்ஷேத்திரமிருக்கிறது. அதில் பகவான் தேவர்களையும் இன்னும்மற்றய மூவர்களையும் வருத்தினவனும், தனதம்சத்தினாலேயே உண்டுபண்ணப்பட்டவனுமான ஜலந்தரன் என்னும் கொடிய வரக்கனை எவ்வாறு லீலையாகக் கொன்றாரோ அந்த திவ்விய சரித்திரத்தைச் சொல்லுகிறேன். இச்சரிதமானது ஹரிபிரம்மாதிகளால் கூடக் கொண்டாடப்பெற்றது. அவ்வாறு மகிமைபெற்ற இச்சரிதத்தைச்சொல்லுகிறேன். அதி ஜாக்கிரதையாய்க் கேட்கவேண்டுமென அருந்தவச்சூதர் சொல்லிவருகிறார்.

---

* "பூமன்சிரங்கண்டி யந்தகன்கோவில்புரமதிகை
மாமன்பறியல் சலந்தரன் விற்குடிமாப்பழூர்
காமன் கொறுக்கை யமன் கடவூரிந்தகாசினியில்
தேமன்னு கொன்றையுந்திகளும் சூடிதன்சேவகமே.

§ பரிமளநாயகியெனவும் வழங்கிவருகிறது.

பெண்ணொர்கூறினர் பெருமையர் சிறுமறிக்கையினர் மெய்யார்ந்த
வண்ணலன்பு செய்வாரவர்க் கெளியவரரிய வரல்லார்க்கு
விண்ணிலார்பொழின் மல்கியமலர் விரிவிற்குடிவீரட்ட
மெண்ணிலாவிய சிந்தையினார் தமக்கிடர்கள் வந்தடையாவே (6)

இடங்கொண்மால் கடலிலங்கையர்கோன்றனை இகலழிதரவூன்று
திடங்கொண்மால் வரையானுரையார் தருபொருளின் னிருளார்ந்த
விடங்கொண்மா மிடறுடையவனுறை திருவிற்குடி வீரட்டந்
தொடங்குமாறிசை பாடிநின்றார் தமைத்துன்பநோயடையாவே (7)

செங்கண்மாலொடு நான்முகன் றேடியுந்திருவடியறியாமை
யெங்குமாயெரியாகிய விறைவனையறை புன்னமுடியார்ந்த
வெங்கண்மால்வரைகரியுரித்து கந்தவன்விற்குடி வீரட்டந்
தங்கையாற்றொழுதேத்த வல்லாரவர் தவமல்கு குணத்தாரே. (8)

பிண்டமுண்டுழல்வார்களும் பிரிதுவராடை யரவர்வார்த்தை
பண்டுமின்று மோர்பொருளெனக் கருதன்மின்பரிவுறு வீர்கேண்மின்
விண்டமாமலர்ச் சடையவனிடமெனில் விற்குடிவீரட்டங்
கண்டுகொண்டடி காதல் செய்வாரவர்கருத்து றுங்குணத்தாரே (9)

விலங்கலேசிலையிட மெனவுடையவன் வீற்குடிவீரட்டத்
திலங்குசோதியை யெம்பெருமான்றனை யெழுறிகழ் கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசை மொழியுமின் மொழிந்தக்கான்மற்றதுவரமாமே(10)

ஸ்ரீ வீரட்டேசாயநம:

ஓம்.

ஸ்ரீ வீரட்டேசாய பரப்பிர்ம்மணே நம:

# ஜலந்தராஸுரன் வதம்.

கடவுள் வணக்கம்.

விற்குடி வீரட்டத்தமர்ந்துறையும் விநாயகர் துதி.

திங்களுடன் கங்கை திகழ்சடையானீன்றளித்த
எங்கள்விநாயகனையேத்தியே—மங்களமாய்
நற்றரங்க வாரிதியின் மைந்தன்ச லந்தரன்றன்
உற்றகதை சொற்றே னுவந்து.

## முதலாவது அத்தியாயம்.

ஸர்வலோக பிதாமகனான சதுர்முகபிர்மன் சிருஷ்டி கிருத்யத்தில் தனக்கு உதவிசெய்யுமாறு உண்டாக்கிய மானஸ புத்திரர்களான ஒன்பது பிரஜாபதிகளுள் தக்ஷன் என்பவர் வேதவல்லி என்னும் மாதினை மணந்து, லோகாதிபத்தியத்தை அடைந்து இல்லறத்திருந்து, தனது பிதாவான பிர்மதேவருக்குச், சிருஷ்டிகிருத்யத்தில் சாதகமாக இருந்துவரு நாளில், அவருடைய தபோபலத்தால் ஜகதம்பிகையாம், பராசக்தி அவருக்கு மூத்தகுமாரியாகக் கிடைக்கப்பெற்றனர். அந்தத் தாக்ஷாயணியைத் தேவாதிதேவனும் விராட்ஸ்வரூபனும் ஸர்வலோக நியந்தாவுமான பக்தபராதீனன், பகவான் பரமசிவன் பாணிக் கிரஹணஞ் செய்துகொண்டு, கைலையங்கிரியில் பிரமதகணங்கள் புடைசூழ, இன்புற்று வாழ்ந்துவருநாளில் தக்ஷபிரஜாபதியானவர் தான் விசுவஜித்து என்னுமோர் பெரு வேள்வி செய்ய நினைத்து, அதற்காகத் தன்னுடைய மருமகனான பரமசிவனையும் தனது மகளான தாக்ஷாயணியையும் அழைத்துவரக் கைலாயம் சென்றகாலையில், பரமசிவன் தன்னை மரியாதைசெய்யவில்லை என்கிற கோபத்தால் மிக சீறி, அப்பரமசிவனைப் பலவாறாகத்தூறி, யக்ஞ பலதாதாவான பரமசிவனுக்கு அவிர்பாகம் கொடாமலே யாகத்தைப் பூர்த்திசெய்து விடுவதாக நிச்சயித்து, தனது பெண்ணான தாக்ஷாயணியையும் அழைத்துவராமலே, தனது இருப்பிட

ம் வந்து, விஷ்ணுமுதலிய மற்றைய தேவர்களை அழைத்து,பிருகு முதலிய ரிஷிகளோடுங் கூட வேள்விக்கு ஆரம்பித்தகாலையில், சகல ரிஷிசிரேஷ்டருக்குள் சிறந்தவரும்,சியவனமுனி குமாரரும் சிவயோகத்தில் மேன்மைபெற்றவருமான ததீசிமுனிவர்வந்தனர். "தேவர்களு மரக்கர்களும் அமிர்தத்துக்காக மகாமேருவை மத்தாகவும்,மகார்ணவத்தைத்தாழியாகவும்,வாஸுகியை தாம்பா கவுங் கொண்டு பாற்கடல் கடைந்தகாலையில், நடந்த தேவாசுர யுத்தத்தில், அரக்கர்களும் அமரர்களும் தங்கள் தங்களது ஆயு தங்களை இத்ததீசிமுனிவர் வசம் ஒப்புவித்துச் சென்றனர். இம் முனிவர் பன்னாள்வரையில் அவைகளைக் காத்திருந்தும், அவர் கள் வராமையால், அவைகளைப் பத்திரமாக வைக்குமாறு தனது சரீரத்திலேயே யிருக்கும்படி, விழுங்கிவிட்டனர். அவைகள் அதிககாலஞ் சென்று விட்டமையால் அவருடைய முதுகெலும் பில் உறைந்துவிட்டன. பிறகு இந்திரனுக்கும் விருத்திரனுக் கும் நடந்த தேவாசுரயுத்தத்தில் இந்திரனது வஜ்ஜிராயுதம் பய னற்றது கண்ட இந்திரன், ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை வேண்ட அவர் எதிர்த்தோன்றி, "முன்னம் ரிபு என்னும் அரசனுக்காக நமது சுதர்சனம் எந்த மகரிஷிமீது பிரயோகிக்கப்பட்டு அவரது திருமேனியில் தாக்கியகாலையில், சிதள் சிதளாக முறிந்து, பய னற்றதாகி விட்டதோ,அத்ததீசிமுனிவர் மகாமேருச்சாரலில் தவ ம்செய்துகொண்டிருக்கின்றனர். அவரது முதுகெலும்பில் தேவா சுரர்களுடைய ஆயுதங்கள், பல சேர்ந்திருப்பதால் அது அதிக பலமுள்ளதாக இருக்கிறது. அவரை அடைந்து நீர் யாசித்தால் கொடுப்பார். அதினால் வஜ்ஜிராயுதம் செய்துகொண்டு விருத்தி ரனை எதிர்த்தால் ஜெயம்பெறலாம்" என மறுமொழி புகன்றனர். உடனே புரந்தரன் அம்முனிவரிடம் சென்று அவரது முதுகெ லும்பை யாசிக்க அம்முனிவர் தேவகாரியத்துக்கு உபயோகப் படும்படி இப்புன்புலால் யாக்கை என்ன தவஞ்செய்ததோ! அறி யேன் எனப் பலவாறு பேசி மிக்க சந்தோஷத்துடன் தன்னைக் கொன்று தன் முதுகெலும்பை எடுத்துக்கொள்ளுமாறு அனுமதி கொடுத்தருளினர். அவ்வாறே இந்திரன் அவரைக்கொன்று அவர துமுதுகெலும்பால் விசுவகர்மனைக்கொண்டு புதியதாக வஜ்ஜிராயு தமொன்றுசெய்வித்து விருத்திரனைக் கொன்றனன். உடனே இம் முனிவரை இந்திரன் தனது தபோ மகிமையால் உயிர்பிழைக்கச் செய்தனன். அப்பெருமைவாய்ந்தமகாபுருஷனான இத்ததீசிமுனி

வர் தக்ஷனது யாகசாலையை அடைந்து தக்ஷபிரஜாபதியைப் பார்த்து ஏ பிர்ம்மன்! நான் சொல்லும் வார்த்தைகளைக்கொஞ் சம் கேட்கவேண்டும்! நீர்செய்யும் காரியம் சரியல்ல. அவ்வாறு செய்தல் கூடாது; செய்யின் யாகம் பயனற்றதாக முடியும். அவ்வாறு முடிவதுடன் சிவாபராதம் வந்தடையும். சிவாபராதத் தால் உமக்கு நாசஹேதுவாகும். உம்மால் யாகத்துக்கு அழைக் கப்பட்ட விஷ்ணு முதலிய தேவர்களும் பிருகு முதலிய ரிஷி சிரேஷ்டர்களும் இந்திரன் முதலிய திக்பாலர்களும் சிவாபரா தத்தை அடையப்போகிறார்கள். சிவாபராதம் மிக்க கொடூரமா னது; ஆகையால் அதைத்தவிர்க்கவேண்டுமெனப்பலவாறுசொல் லிப் பின்னும் சிவபெருமானுடைய அனேகவிதமான லீலாவிநோ தங்களையும் மகத்துவங்களையுஞ் சொல்ல ஆரம்பித்தார். கேளும் பிரஜாபதியே தேவாதிதேவனான மகாதேவருடைய ஓர் லீலை யைச் சொல்லுகிறேன் சற்றுகேட்கவேண்டுமெனச் சொல்லி, பரமசிவனைச் சற்றுச் சிந்தித்துத், தேகம்கம்பித்து அதிக பக்தி யோடு சொல்லிவருகிறார்.

---

## 2-வது அத்தியாயம்.

கேளும் பிரஜாபதியே:—திருலோகாதிபதியான தேவேந்தி ரன் ஒருகால் குபேரன் வருணன் முதலிய தேவர்கள் பிருஹஸ் பதி முதலிய ரிஷிகள் கருடகாந்தருவ ஸித்தவித்தியாதர அப்ஸ ரோகணங்கள் புடைசூழ தனது முழுஆடம்பரத்துடன் தன்னை யடைந்தவர் யாவர்க்கும் நிர்ப்பயத்தையும் துக்கநாசத்தையும் நோயில்லாமையையும், இஷ்ட சித்தியையும், நித்திய சுகத்தை யும், கொடுத்து, ஊழிகாலத்தில் உலகமெலாமழிந்தாலும், தம் தலைவர்போல் அழிவற்றியங்கும் சத்தியஞான சுவரூபமாகிய கை லையங்கிரியை அடைந்து, ஸ்ரீமகாதேவனைத்தரிசிக்கவேண்டி கோ புரவாசலில் நுழைந்தனன். அப்போது பரமசிவன் ஓர் லீலார்த்த மாய் தமது பிரமத கணங்களுள் தாம் ஒருவராய்ப் பயங்கரமான கோரரூபமும் சிவந்தநேத்திரமும் கருத்தகாத்திரமும் யுத்த பாத்திரமும் தெத்திப்பல்லும் அதற் கொத்தசொல்லும் கையில் கதையும்கொண்ட ஓர் துவாரபாலனாய் நின்றனர். அவரைக்க

ண்டு இந்திரன் பரமசிவனது சமயம் எவ்வாறிருக்கின்றது எனப் பலதரம் கேட்டும் பதிலுரையாமையால் மிகச்சினந்து சிவனடியார்களது மகிமையை,தேவராஜன் நாம் என்னும்அகங்காரத்தால் மறந்து,தன்னை மதிக்கவில்லையென மிகச்சினந்து,தன் கையிலுள்ள வஜ்ஜிராயுதத்தால்நையப்புடைத்தகாலையில் அவ்வஜ்ஜிராயுதமான துகற்பாறையில்மோதிய மட்பாண்டம்போல் தவிடுபொடியாயிற்று. உடனே பரமசிவனும் தனதுசுயஉருவத்துடன்எதிர்தோன்றி நெற்றிக்கண்ணில் நெருப்புப்பொறிபறக்க இந்திரனைச் சபிக்க ஆரம்பித்த காலையில், புரந்தரன் நடுநடுங்கி மெய்சிலிர்த்து இருகை கூப்பிவிண்மாரியெனயிருகண்மாரிபெய்யமன்னிக்கவேண்டுமென்றுபலவாறுபிரார்த்திக்க,பிருஹஸ்பதிபகவானெனவர் அரியமறைகளால்தோத்திரஞ் செய்து அமரேசனைக் காப்பாற்ற வேண்டுமென வேண்ட அவ்வாறே பகவானும் கருணைகூர்ந்து அமரேச! அஞ்ச வேண்டாம் அபயம் தந்தேன் என அனுக்கிரஹம்பண்ணி அமரர்களோடும் அந்தணர்களோடும் அமரருலகு அடையும் வண்ணமனுப்பிய பின்னர் அவ்விந்திரன் விஷயமாய் எழுந்த சோபாக்கினியை எங்கு போடலாமென யோசித்துத்தமது வலக்கையால் எடுத்து, உவர்க்கடலை நோக்கி எறிந்தனர். அவ்வக்கினியானது லவணசமுத்திரத்தில் விழுந்து வடவனல் போல் தண்ணீரை உறிஞ்சித்தமோகுணப்பிரதானமானதால்அசுராம்சத்தை அடைந்து,பழுக்கக்காய்ச்சியசெப்பூசிகள் போன்ற செம்பட்டைமயிரும், அக்கினிகுண்டம்போன்ற சிவந்த இருநேத்திரமும், பிலத்துவாரம்போன்ற நாசிகையும்,பர்வதகுகைபோன்றஅகன்ற வாயும், சோழிபோன்ற தெத்திப்பற்களும், உரலைப்போன்ற கழுத்தும், கற்பாறைபோன்றவிசாலமானமார்பும், பானைபோன்ற வயிறும், இருப்புலக்கைபோன்ற கைகளும், பனைமரம் போன்றகால்களும், ஊழிக்காற்றைத்தோற்கச்செய்யும் சுவாசக்காற்றும், மேககர்ச்சனையையொத்தகுரலுமுடைய ஓராண்மகவு வடிவங்கொண்டு, அலறியழுதது. அவ்வழுகுரலைக் கேட்டமாத்திரத்தில் ஸப்தகுலா சலங்களும், பதினன்கு உலகங்களும் நடுநடுங்கிற்று. அக்காலையில் வருணன் அக்குழவியை எடுத்து தனதுலகம்சென்று சின்னுள் வளர்த்து வருகையில், ஒருநாள் பிர்ம்மதேவன் வருணனது கிருஹத்துக்குவர அவரால் அர்க்கியபாத்திய ஆசமனிய முதலிய சோடச உபசாரங்கள் அளிக்கப்பட்டுஉபசரிக்கப்பெற்று அவரால்கொடுக்கப்பட்ட

மதலையை இருகைகளால் வாங்கி "மக்கண் மெய்தீண்டலுடற் கின்பம்" என்னும் முதுமொழிக்கிணங்க மடிமேல்வைத்து உச்சி மோந்துசீராட்டும் வேளையில் அசுரகுழவியானது பற்றி பிரும்ம தேவருடையமுகத்துமயிரைஅதிபலமாகப்பிடித்திழுத்தது. அவ் வலி பொறுக்கமாட்டாமல் அப்பரமேஷ்டியினது இருகண்களி னின்றும் நீர்த்துளிகள் ததும்பி மடிமீதிருந்த மதலையின்மேல் விழுந்தது. உடனே அத்திசைமுகன் "இக்குழவி என் கண்ணீ ரைத்தரித்தமையால் இன்றுமுதல் * ஜலந்தரன் என அழைக்கப் படட்டும். பிரம்ம விஷ்ணு ருத்திரர்களையும் இந்திராதி தேவர்க ளையும் ஜெயிக்கும் வல்லமை இவனுக்குண்டாகட்டும்; சகல சாஸ் திரங்களிலுமிவன் வித்வானாகட்டும்; கைலாஸாதிபதியைத்தவிர வேறு ஒருவராலும் இவனுக்கு வதமில்லாதிருக்கட்டுமென" வும், வரங்கள் பல ஈந்து தமதிருப்பிடமான சத்தியலோகம் சென்று விட்டனர். வருணனிம்மதலையைக் கொஞ்சகாலம் நாளொ ருமேனியும், பொழுதொருவண்ணமுமாகவளர்த்துவந்தனன்.

இச்சலந்தரனுக்குபாலப்பருவந்தாண்டியௌவனம் வந்தபொ ழுது, அசுரகுருவான சுக்கிராசாரியரைத் தனக்கு ஆசிரியனாகக் கொண்டு தனதுவலிமையால் பாதாளத்தில் மறைந்திருந்த அசுரர் களையெல்லாம்வரவழைத்து அசுரத் தச்சனை மயனென்பவனால் தனதுபேரால் ஜலந்தரபுரம் என்னும் அதி விசாலமும் விசித்திர முமான ஓர்பட்டணத்தை நிர்மாணம்செய்துகொண்டு அரக்கர் கள் அரசனை * காலநேமி என்பவனுடையபெண்ணை நீரு ண்டமேகத்தையும் அந்தகாரத்தையும் பழித்த அளகபாரத்தை யும், மூன்றாம்பிறையும் வெட்கி முதுகிட்டோடச்செய்யும் நெற்றி யினையும், கருநீலமலர்களோ அல்லது கெண்டைமீன்களோவென ஐயமுறும்படிசெய்து கடைவிழிகாதளவு நீண்டு சிறுத்துகறுவிழி கறுத்து ஆடவர்மனங்களைத்துன்புறுத்துவதால் வேல்விழியென் றுமொழியுமாறு கருணைநிறைந்த விசாலமான இரண்டுநேத்திரங் களையும், காமனது கரும்புவில்லையொத்த இருபுருவங்களையும்குமி ழமலரினையும் சண்பகமலரினையுமொத்த நாசியினையும்வள்ளைத்த ண்டையும் கத்தரிக்கோலையுமொத்துச்சந்திர சூரியர்களை ஒளிமழு

---

* ஜெலத்தினால் தரிக்கப்பட்டவன் அல்லது தண்ணீரால் தாக்கப்பட்டு அதில் உண்டானவன்.

* இக்கொடியவரக்கன் இவ்வவதாரத்தில் ஸ்ரீ ஹரியால் வதைசெய்யப்பட்டான். மறு ஜென்மத்தில் இக்காலநேமியே உக்கிரசேனன் புத்திரன் கம்ஸனாய்ப்பிறந்து கண்ணபிரானால் கொல்லப்பட்டனன்.

ங்கச்செய்யும்படியான பிரகாசம் பொருந்திய தாடகங்களைத்தாங்கிய விருகாதுகளையும், கோவைக்கனியையும் முருக்கமலரையும் பரிகசிக்கக்கூடிய அமிர்தரசம்பொருந்தியஅதரத்தையும், கண்ணுடியைப்பழிக்கும் கபோலங்களையும், பவளக்கிண்ணத்தையொத்த மோவாய்க்கட்டையினையும் முல்லை யரும்பையும் முத்துசரத்தையும் மாதுளமுத்தையும் பழிக்கும் பல்வரிசையினையும், தாமரை மலரின் இதழினையொத்து நித்தியமும் கலைமகள்வாழும் கனகமணி பீடம்போன்ற நாவினையும், கம்புக்கிரீவத்தையும் கமுகையுமொத்து கோடிசூரியபிரகாசம் பொருந்திய பல அணிகளால் அலங்கரிக்கப்பெற்ற கழுத்தினையும் வாழைத்தண்டையொத்து கடககங்கணங்களை அணிந்த இருகைகளையும், காந்தள் மலரினையொத்தஅகங்கையினையும், பயற்றங்காயினையொத்துபலகணையாழிகளைத்தாங்கியவிரல்களையும்கிஞ்சுகங்களின்மூக்கினையொத்தநகங்களையும், வித்வஜ்ஜெனங்களால் உவமையாகக்கூறப்படும்பொற்சிலைபோர்த்தயானையின் மத்தகங்கள், சக்கரவாகபுட்கள், பந்து, அருணங்கனி, தாளம், முளரிமொட்டு, செப்பு, கிண்ணம், இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் குறைகளிருக்கின்றன வென்று கூறும்படி ஒன்றையுமொவ்வாது நுண்ணிடைபுகாது மலைபோல் கடினமாயும் மலர்போல் மிருதுவாயும் மார்புமுழுதும் படர்ந்து, நிமிர்ந்து, பருத்து முகம்கறுத்து தனக்கு நிகர்தானேயென இறுமாந்து சுணங்கு பூத்து தேவர்களுண்ட அமிர்தத்தையும் வெறுக்கச்செய்யும் உருசியினையுடைய பாலினை உட்கொண்டு காமுகர் மனங்களைக் கவருகின்றனவும் கழுத்திலணிந்த ஆபரணங்கள்மேல் விழுந்து அலங்கரிக்கபெற்றனவுமான இருகொங்கைகளையும், ஆலிலைபோன்ற அடிவயிற்றினையும் இவ்வணங்கைச் சிருஷ்டித்த அயன் இடையை உண்டுபண்ண மறந்தானோவென ஐயமுண்டாக்கும் மின்போன்ற இடையையும், யானைத் துதிக்கையையொத்த தொடையையும், ஞெண்டுபோன்ற முழங்கால்களையும், வராலையொத்த கணுக்காலையும், புத்தகத்தையும் ஆமையையுமொத்த பாதத்தினையு மடைந்து, அவளது நடையைக்கண்டபிடியானைகள் காட்டிலும் அன்னங்கள் ஆகாயத்திலும் மறைந்தனவோவெனவும், குரலோசையைக் கேட்டுகோகிலங்கள் மரங்களில் மறைந்தனவோ யாழ்கள் நரம்புகளால் கட்டுண்டனவோ வெனவும், அவளது ஸ்தனபாரங்களைச் சுமக்கமாட்டாது அவளது நுண்ணிடையானது ஓலமிட்டு அலறு

வதுபோலும் அவளது பாதங்களிலணிந்த நூபுரங்கள் சப்தஞ் செய்தனவென மொழியுமாறு மிருந்தது; மதனனை யீன்றமாதவனே ஒருக்கால் காமுறும்படியான ரூபமும், ரூபத்தில் லட்சுமியையும்,கல்வியில் கலைமகளையும், அறத்தில் மலைமகளையும், யௌவனத்தில் புலோமசையையும், கற்பில் அருந்ததியையும், வெல்லும் அதிரூப சௌந்திரியமுள்ள பிருந்தை என்னும் மாதினைத் தனதுபுஜபலபராக்கிரமத்தால் அடைந்து வேதவிதிப்படி மணந்து இராச்சியபரிபாலனம் செய்து கொண்டு வந்தனன்.

---

## 3-வது அத்தியாயம்.

இவ்வாருக ஜலந்தரன் இராச்யபரிபாலனம்செய்துவரும்நாளில் ஆதிகாலத்தில்தேவர்களால் அபஜயப்பட்டுபாதாளத்தில்ஒளிந்திருந்த அரக்கர்கள் யாவரும் ஒருவர் ஒருவராய்ப்பயமற்றுஜலந்தரனை வந்தடைந்தனர்; இவ்வாறிருக்கையில் ஒருநாள் ஜலந்தரன் தனது ஆசாரியனுன வெள்ளியம் பகவானைப் பார்த்து உமக்கு என் தலை உடைந்திருக்கிறதென்றுஉசாவ அமரர்களும் அரக்கர்களும் ஆழாழி கடைந்ததையும், அதிலுண்டான சமஸ்த ரத்தினங்களையும் சசீமணாளன் கவர்ந்து கொண்டதையும், அரக்கர்கள் அவமானப்பட்டதையுஞ் சேர்த்து ஓர் காரணமாக மொழிந்தனர். அதுகேட்ட ஜலந்தரன் மிகச்சினந்து கண்களில் தீப்பொறிபறக்க வீசை துடிதுடிக்க தேகம் படபடக்க கஸ்மாரனென்னுமோர் தூதனைக்கூவிச் சத்துருவான இந்திரனிடம் போக ஏவி ரத்தினங்களைக் கேட்டுவரும்படி உசாவினன், பாவியான ஜலந்தரனென்னுமரக்கவரசன். அவ்வாறே அவ்வரக்கன் அரசன் ஆணையைச் சிரமேற் கொண்டு ஐராவதனிடஞ் சென்றுயான் அரக்கர் கோனும் ஜலந்தரன் தூதுவன், அமரேச! நான் சொல்வதைக் கொஞ்சம் செவிசாய்மின்! என மிக்ககர்வத்தோடு உரைத்து "எமது அப்பனும் ஆர்கலியிடத்துதித்த அளவிலா அணிமணிகளை யாதுகாரணம் பற்றிக் கவர்ந்தீரெனவும், எனது ஐயனிடத்துண்டான ஐசுவரியங்களனைத்திற்கும் அதிபன் யானிருக்க எவ்வாறு தாம் கவர்ந்தீர் எனவும் அவ்வாறு கவர்ந்த மணிகளை வாங்கிவரும்படி அனுப்பினுரென்னை எனது அரசன்" எனவும் உரைத்தனன். அதுகேட்ட இந்திரன் புன்

சிரிப்புக் கொண்டு சொல்லுகிறான், அறிவிலா அரக்கனே கேளாய்! எனக்கு சத்துருக்களான என்னால் அடியுண்டு துரத்தப்பட்டவனேக அசுரர்களும் என் தம்பியான உபேந்திரனால் புடையுண்ட சங்கன் என்பவனும், எனது விரோதிகளான பர்வதங்களும் ஒளிந்துகொள்ள இடம் கொடுத்தமைபற்றி, சமுத்திரமானது கடையப்பட்டது. அதிலுண்டான ரத்தினங்களும் எங்களால் அடையப்பட்டது; இதை உன் அரசனுக்கு அறிவிப்பாயெனப் பகர்ந்தனன். உடனே அவ்வரக்கன் இந்திரனுரைத்த இம்மாற்றமனைத்தையும் தனது அரசனிடமறிவிக்க ஜலந்தரன் அடங்காத கோபத்துடன் இருவிழிகளினு மக்கினிப் பொறிபறக்க வீசை துடிக்க *சும்பன் நிசும்பன் என்னும் அரக்கர்களுடனும் நாலுவகையான படைகள் புடைசூழ அமராவதியை அடுத்து அரக்கர்களை விடுத்து, அமரேசனை அரசுபுரியாமற்றடுத்து, லக்ஷக்கணக்கான அஸ்திரங்களை விடுத்து, தேவர்களோடுசமர்கொடுத்து, சுதர்மை என்னும் சபையைக்கெடுத்து போர் புரிந்தகாலையில், அமரர்சேனையு மரக்கர்சேனையுமொன்றோடொன்று கலந்து யுத்தம்செய்கையில் அரக்கர்சேனைக்கு எதிர்நிற்க முடியாமல் அமரர்சேனை முதுகிட்டோடுவதைக்கண்ட இந்திரன் முதலிய வானவர், அசுரர்களுக்கு பயந்து அரக்கர் அணுகாவரம் பெற்ற மகம்மேரு மலையைச்சார்ந்து அங்கு வசித்து வந்தனர். இங்கு அபஜயப்பட்ட அமரர்சேனையை க்கண்ட அரக்கர்கள் ஆரவாரித்து ஜயபேரியடித்து அமராபுரியையடைந்து அசுரக்கொடியை நாட்டி அமரர்களை ஓட்டி சும்ப நிசும்பர்களை இந்திரன் முதலியதேவர்களின் ஸ்தானங்களில்முடி சூட்டிச் சுவர்ணபர்வதத்தின்குகையை அடைந்த அமரர்களைத் தேடிச்சென்றனன் அரக்கர் கோமான். இவ்வாறே குபேரன் முதலியமற்றைய திக்குபாலர்களையும் எதிர்த்துச் சமர்தொடுத்து அவர்களது ஊர்களை விட்டு வோட்டிதங்களது துவஜங்களை நாட்டினன் ஜலந்தரன் என்னுமரசன்.

## 4-வது அத்தியாயம்.

சுவர்ணபர்வதத்தின்குகையைத் தேடிவருகிறஜலந்தரனைக்கண்டதேவர்கள் மிகப்பயந்து நடுக்கமுற்ற வர்களாய் ஸ்ரீமகாவிஷ்ணு

* இவர்களைப் பற்றி தேவிமாகாத்மியத்தில் காணலாகும்.

வை ஸ்தோத்திரஞ் செய்யவாரம்பித்தனர்; பக்தர்களுடைய கஷ்டங்களை நீக்க மச்சம் கூர்மம் முதலிய அனேக அவதாரங்களை எடுத்து எங்களைக் காத்தருளிய பிரபோ! பிர்ம்மா முதல் பிபீலிகை பரியந்தமுள்ள சகல வஸ்துக்களையும் ஆக்கவும் அளிக்கவும் அழிக்கவும் வல்ல பிரபோ, சங்கு சக்கிராதிபஞ்சாயுதங்கள், வக்ஷஸ்தலத்தில் ஸ்ரீ லெக்ஷிமீபிராட்டியார், வைஜயந்தி வனமாலை, கௌஸ்துவமணி இவைகளால் அலங்கரிக்கப்பட்டபிரபோ! அஸுரர்களுக்கு அரியாயும், சர்ப்பத்தின்மீது சயனிப்பவராயும், சதா யோக நித்திரை செய்பவராயும், துஷ்டர்களைச் சிக்ஷித்து சிஷ்டர்களை ரக்ஷிக்கிற ஹேபிரபோ! அஸுரர்களின் காலனையும் தேவர்களின் அனுகூலனையும், விராட் ஸ்வரூபியுமான உம்மை நமஸ்கரிக்கிறோம் எனப் பலவாறு ஸ்தோத்திரம் செய்தார்கள். இவ்வாறு விண்ணவர்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்ட ஸ்ரீ புருஷோத்தமன் சங்கு சக்கரம் கதை கட்கம் சார்ங்கம் முதலிய பஞ்சாயுதங்களையுந் தரித்து கருடன்மீதாரோகணித்துப் பக்கத்திருந்த பிராட்டியைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறார்; ஏ. மனோரமே! உனது சகோதரனை ஜலந்தரனால் (உன்போல் நீரில் உண்டானவன்) தேவதைகளுக்கு உபத்திரவம் பண்ணப்படுகிறது. அதை நிவர்த்திசெய்யும் பொருட்டு சீக்கிரமாக யுத்தத்திற்குபோகிறேன் என்கிற பத்மநாபன் வார்த்தையைக்கேட்டலெக்ஷுமியானவள் ஹேநாத! கேட்கவேண்டும், நான் எப்போதும், தங்களுடைய பார்யையாக விருந்து தங்களை பக்திபண்ணுவது உண்மையாகயிருக்குமே யாகில், எனது உடன் பிறந்தானை எப்படிக்கொல்லுவீர்என்கிற பத்மினியின்வார்த்தையைக் கேட்ட பரந்தாமன், ஹேபிரியே! ருத்திராம்சத்தினால் உண்டானவனும் பிர்ம்மாவின் வரத்தை அடைந்தவனும், உனது விசுவாசத்திற்குப்பாத்தியப் பட்டவனுமான அஜ்ஜலந்தரனை நான் கொல்லவில்லை யென மொழிந்து, கருடன்மீதேறி, எந்த விடத்தில் தேவர்கள் தன்னைக் குறித்துத் தோத்திரம் செய்கிறார்களோ அந்த இடம்போய் சேர்ந்தார். கேளாய் தக்ஷனே அப்போது கருடனது சிறகின் காற்றினாலடிபட்டு கஷ்டத்தை அடைந்த அசுரர்கள் பெருங்காற்றினால்கலைக்கப்பட்ட மேகத்திரள்களைப்போல் நாலுபக்கங்களிலும் ஓடினார்கள். அதை யறிந்த ஜலந்தரன் கோபத்தினால் கண்களில் நெருப்புப் பொறிபறக்க மீசை துடிக்க பற்களை நற நற வெனக் கடித்து விஷ்ணுவிருக்கிற விடம் வந்து வில்லை வளைத்து குணத்

வனி பண்ணிப் பெரும்போர் விளைத்தான். பாணங்களினால் நிற்க விடமில்லாமல் ஆகாயத்தை நிறைத்தான். அதைப் பார்த்த விஷ்ணு வானவர் சத்துருவினுடைய வில் கொடி குடை ரதம் குதிரை சாரதி முதலியவைகளை அடித்துச் சின்ன பின்னப்படுத்தி ஜலந்தரன்மார்பிலோர் பாணத்தால் அடித்தார். ஜலந்தரன் இரத்தவெள்ளம்பெருக அதிக கோபமுடையவனாய் கதையை கையிலெடுத்து கருடன் தலையிலோங்கி ஓர் அடி அடித்தான். உடனே விஷ்ணு சிரித்துக்கொண்டு தனது நந்தகமென்னும் கத்தியை எடுத்து அக்கதாயுதத்தை இரண்டு துண்டாகத் துணித்தனர். அப்போது ஜலந்தரன் அதிக கோபத்தோடு மாதவனது மார்பில் ஓங்கி ஒரு குத்து குத்தினான். பிறகு இருவர்களும் கைகளாலும் கால்களாலும் முஷ்டியுத்தஞ் செய்து பூமியை நடுங்கும்படி செய்து கொண்டு 24 ஆயிரம் வருஷம் துந்துவயுத்தம் செய்யுங் காலத்தில் மகா பலிஷ்டனான விஷ்ணுவானவர் ஜலந்தரனைப் பார்த்து ஹே அசுர சிரேஷ்டா! உனது பலத்தைக் கண்டுமிக்கமெச்சினன். உனக்கு வேண்டிய வரன்களை இப்போதே கேள். அவைகள் கொடுக்கக் கூடாதாயினுங் கொடுக்கிறேன் என அதற்கு அரக்க அரசன் ஹே ஹரியே! நீர் எனது பராக்கிரமத்துக்கு சந்தோஷபட்டது உண்மையாயின் உமது பரிவார தேவதைகளோடும் ஸ்ரீலெக்ஷ்மி தேவியோடும் நீர் எனது ஜலந்தரபுரத்தில் அனவரதமும் வசிக்கவேண்டுமென வேண்ட அவ்வாறே ஸ்ரீயப்பதியும் சமஸ்ததேவதைகளோடும் பிராட்டியோடும் ஜலந்தரபுரத்தை அடைந்து அங்கு வசித்து வந்தனர். ஜலந்தரன் தேவர்களின் அதிகாரங்களை அரக்கர்களுக்குக் கொடுத்து அவர்களை அந்த ஸ்தானங்களில் ஏற்படுத்தி தனது ராஜதானிக்கிவந்து தேவர்கள் யாவரும் தேடி வைத்திருந்த ரத்தினங்களையெல்லாம் அபகரித்து அதிக பலத்தோடும் மெத்த ஆனந்தத்தோடும் பிருந்தை என்னும் பெருமாட்டியோடும் மூன்றுலோகங்களையும் தன் சுவாதீனப்படுத்திக் கொண்டு பரிபாலித்து வந்தனன். அந்த ஜலந்தரபுரத்திலுள்ள யாவத்து ஜனங்களுக்கும் வியாதி துக்கம் தரித்திரம் மரணம் இவைகள் ஒருசமயத்திலும் கிடையாது. இவ்வாறு ஜலந்தரன் ராஜ்ஜியபரிபாலனம் செய்துவருகையில் விஷ்ணுவைத் தரிசிக்க நாரதமகாரிஷி ஜலந்தரபுரம் வந்தார். என்று அகஸ்தியமுனிவர் தக்கனைப்பார்த்துச் சொல்லிக்கொண்டு வந்தார்.

---

## 5-வது அத்தியாயம்,

தக்கனே கேண்மின்:—

இவ்வாறாக வந்த நாரத மஹாரிஷியை ஜலந்தரன் கண்டு அதி பக்தியோடு அர்க்கிய பாத்யாதிஷோடசோபசாரங்களால்உபசரித்து நல்வரத்தா?எங்கிருந்து வருகிறீர்கள்? இவ்விடம்வந்தகாரணம் யாது? தாங்கள் இது வரையில் சஞ்சரித்து வந்த பலான இடங்களில் எதாவது அதிசயங்கள் உண்டா? எதாவது உண்டாயின் தயவு செய்து அவற்றை எனக்குச் சொல்ல வேணுமெனக் கேட்கிற ஜலந்தரனைப் பார்த்து கேளும் அசுரேந்திரா! யான் திரிலோகங்களிலும் சஞ்சரித்துக் கொண்டு வருங்கால் கைலையங்கிரிக்குச் சென்று பார்வதியைப்பக்கத்துடைய பரமசிவனைத் தரிசித்து அவடத்துள்ள அதிசயங்களெல்லாவற்றையும்பார்த்துக் கொண்டும் வருகையில் இம்மாதிரியான பட்டணம் இப்பூவுலகில் எங்காகினும் இருக்கிறதா வெனஒருக்கால்யோஜித்தேன். அப்போது. தற்செயலாய் உனது ஜலந்தரபுரம் ஞாபகத்துக்கு வந்தது. ஆகையால் அதைப்பார்த்து விட்டு உன்னையும் கண்டு விட்டுப் போவதாக இவிடம் வந்தனன். உனது பட்டணமும் கைலயங்கிரிக்கு எவ்விதத்திலும் ஒத்திருக்கிறது. ஆனால் அந்த பரமசிவனுடைய இடதுபாகத்தில் மின்னல்கொடிபோல் பிரகாசித்து கொண்டிருக்கும் பார்வதியைப்போல் ஒரு பெண்மட்டில் இந்நகரிலில்லை யென்று நினைக்கிறேன். உன்னிடத்தில் அனேகம் அப்ஸரஸ்திரீகள் தேவஸ்திரீகள் நாக கன்னிகைகள்முதலிய இன்னும் ரூபலாவண்யமுள்ள அனேக வனிதைகள் இருந்தாலும் அவளது ரூபத்தில் எள்ளளவிற்கும் சரியாக மாட்டார்கள். மேலும் ரூபலாவண்யத்திற் சிறந்த நினது பாரியை பிருந்தையும்ஈடாகாள். அந்தஸ்திரீயினது உருவத்தை ஆயிரம் நாவுபடைத்த அனந்தனாலும் அறைதரமுடியாதெனில் துறவு பூண்ட யான் எவ்வாறு மொழிவது; இக்காசினியே காகிதமாகவும், கார்கடலே கறுமையாகவும்,கர்ப்பகத்தருவே எழுதுகோலாகவுங்கொண்டு, இவ்வூழிகால முழுதும் பொழுதாகக்கொண்டு கலைமகளே வரைவதெனினும் முடியாத பேரழகுவாய்ந்த அம்மடமாது உமக்கில்லாதது ஓர் குறைவுதான். மரகதத்தால்கடைந்தெடுத்த சித்திரப்பாவைபோன்ற உருவமும், கருக்கொண்டமேகத்தையும், காசாம்பூவையும் பழித்த திருமேனியும், மூன்றாம் பிறையைப் பழித்த நுதலும் கொண்டு, மீனானது தனது குஞ்சுகளை ஒருதரம்திரும்பிப் பார்த்

தமாத்திரத்தில் அவைகள் வயிறு நிறைந்து எவ்வாறு திருப்தியாகின்றனவோ அவ்வாறே பக்தர்களது மனோபாவங்களை தனது கடைக்கண் பார்வையினாலேயே பரிபூர்ணம் பண்ணி வைப்பதினால் மீனின்குணம் பெற்ற கண்களையுடைத்தமை பற்றி மீனாட்சியெனவும்,சகல அண்டங்களிலுமுள்ள சராசரங்களனைத்தையுமேக காலத்தில் ஒருங்கே உஜ்ஜீவிக்கும்படி பார்த்துவரும் தன்மையுள்ள நேத்திரங்களை யுடையவள் பற்றி விசாலாட்சியெனவும்,சதுர்வித புருஷார்த்தங்களுள் இப்பூவுலகிலுள்ளவர்கள் அதிகமாய் விரும்பும் மூன்றாவதான இன்பத்தை இச்சித்தபடி உடனே அளிக்கும் சக்தியை வாய்க்கப்பெற்றதால் காமாட்சி யெனவும், பக்தர்களாகிற சந்திரனின் வரவை எதிர்பார்த்து முகமலர்ச்சியோடு அவர்களின் வேண்டுகோளின்படி அருள்புரியும் சக்தி வாய்ந்த கண்களையுடையவளாதலால் நீலோத்பலாட்சியெனவும், பலபெயர்களால் துதிக்கப்படுபவள், "காணக்கருதவினிய அழகின் பேருருவானவள், பரிமளநாயகியென திருநாமமுடையவள்,சர்வாங்கசுமங்கலை சர்வவித்தியாகாரணி,சர்வஞானங்குரை, நித்திய கல்லியாணி நித்தியசுந்தரி அமிர்த கிரணமுகமண்டலி தயாரஸ பூரிதவிலாசலோசனி ஸ்துதிப்ரியசுரோத்திரி, மதுரவாக்கு விநோதினி நித்தியமாங்கலியசங்கசிரீவை, அபீதகுஜவல்லி, பிர்மாதி ஜகத்தினாதாரவுதாரை, சர்வைஸ்சுவரியகாரணி, மகாராஜ்ஞை,மஹாதேவி, சிருஷ்டிதிதிசம்ஹாரா திரோபாவானுக்கிரஹதாயினி, சர்வதந்திரேஸ்வரி, சர்வயந்திரேஸ்வரி, என்று வேதங்களால் துதிக்கப்படுபவள் திரிபுரை, சுந்தரி, யந்தரி, சிந்துரப்பரிபுரை, நாரணியாம்பாலவண்ணத்தி யிருள்புரை யீசை மனோன்மணி என துதிக்கப்படுபவள் "தாளணி நூபுரஞ் செம்பட்டுத்தானுடை வாரணி கொங்கை மலர் கன்னல் வாளிவில், ஏரணியங்குசபாச மெழின் முடி, காரணிமாமணி குண்டலக்காதிக்கே," எனவும் தோத்திரங்கள் பல செய்யப்படுபவள்," இப்புவியை ஒருதலையால்சுமக்கும் அனந்தனை சிறுவிரல்மோதிரமாய் அணிந்தவள், இவ்வாறு ரூபலாவணியத்திலும், சக்தியிலும்மேன்மை பொருந்திய வனிதாரத்னமானது உனக்கில்லாதது ஓர் குறைவுதான். முன்பு சதுர்முக பிர்மன் எவளுடைய அழகாகிற சமுத்திரத்தில் முழுகி தவித்தாரோ காமனுக்குச்சத்துருவான பரமசிவனே யாதொரு ஸ்திரீயாகிற வனத்தில் சபரிரூபத்துடன் பிரமித்தாரோ பிரும்மாவானவர் யாதொரு ஸ்திரீயுனுடைய ரூபத்தைப்

பார்த்து அனேக வனிதைகளை யுண்டுபண்ணியும் அவ்வாறு ஒருவர் கூட ஆகவில்லையே என்று திகைத்தாரோ அந்தபெண்மணியை அனுபவிக்க பரமசிவனைத் தவிர வேறு ஒருவருமில்லையோ அவ்வாறு பெருமைவாய்ந்த ஸ்திரி உமக்கு இல்லாததது ஒரு குறைவுதான் என்று சொல்லிவிட்டு அந்தர்த்தியானமாயினர். உடனே ஜலந்தரன் மதிகெட்டு மன்மதனுல்பிடிக்கபட்டு காலபாசம் கழுத்தில்விழுவதை அறியாது தனக்குக் கேடுவருவதை நினையாது உலகமாதாவான ஜகதம்பிகையை கெட்ட எண்ணத்துடன் நினைத்து சம்மிகை என்னும் ஓர் அசுரஸ்திரீயின் புதல்வனுன ருகு என்னுமோர் தூதனை கைலாயத்துக்கு அனுப்பினுன் அசுரேந்திரன் ஜலந்தரனுல் இவ்வாறு அனுப்பப்பட்டருகு என்பவன் கைலையை அடைந்து நந்தியின் விடைகொண்டு நாதன் முன்சென்று விருஷபக்கொடிபடைத்த ஹேசிவனே! எங்களால் சேவிக்கப்பட்டவரும் திருலோகாதிபதியும் சமஸ்த ரத்தினங்களுக்கும் அஷ்டஐசுவரியங்களுக்கும் அதிபனுன ஜலந்தரன் என்னும் அசுரராஜன் உம்மைக்கண்டு ஒருவார்த்தை சொல்லச்சொன்னுர். அதைக்கேண்மின்! உமக்கு இருப்பிடமில்லாது சுடலையில் வசிக்கிறீர்; வஸ்திர மில்லாது யானை உரியையும் புலித்தோலையும் உடுக்கிறீர், நவமணியில்லாது பணிஅணி பூணுகிறீர், நல்ல ஞாணமிருக்க சுட்டசாணத்தை பூசினீர் வெட்கமில்லாது முடியில் மங்கையையும் மதியையும் தரித்தீர் மாட்டில் ஏறினீர். மங்கையை பக்கத்தில் வைத்தீர், எலும்பை தரித்தீர், மண்டை ஓட்டில் பிச்சை எடுத்துண்கிறீர் உமக்கு மலைமகள் எதற்கு எனக் கேட்டு அவளை அழைத்து வரச்சொன்னுர் எங்கள் அரசன் என்றவுடன், கோபக்குறிகொண்ட சிவகணங்களில் ஒருவர் இவ்வரக்கனைக்கொல்ல எத்தனிப்பதைக் கண்ட பரமசிவன் மந்தஹாஸத்துடன் தூதன் இவனைக் கொல்லுதல் கூடாதெனமொழிந்து விட்டுவிடும்படி உத்திரவு அளித்தனர். உடனே அக்கணுதிபர் அவ்வரக்கனைத் தூக்கி ஆகாயத்தில் எறிய அவன் ஜலந்தரபுரம் போய் விழுந்து இன்றையதினம் மறுபிறப்பாய் பிறந்தேனென நினைத்து அரசனது முன்னிலையை அடைந்து நடந்த வற்றை நவின்றனன்.

---

## 6-வது அத்தியாயம்.

இவ்வாறு தூதன் வார்த்தையைக் கேட்ட ஜலந்தரன் அதிக கோபத்துடன் இருகண்களிலும் நெருப்புப் பொரி பறக்க முகம் சிவக்க மீசை துடிக்க தேகம் படபடக்க இருகைகளேபபிசைந்து பூமியின்மேல் பலமாக ஓர் அறை அறைந்து மிக்க கோபத்துடன் கூடினவனுய் அநேகங் கோடி அசுரர்களால் சூழப்பட்டவனுய் வெள்ளியம்பகவானே முன்னிட்டு பரமசிவனேடு யுத்தத்திற்கு புறப்படும்போது அவனது தலையிலிருந்த கிரீடம் தவரி கீழே விழுந்தது அவனது பிரிய பாரியை பிருந்தை பிணகபாணியுடன்பிணக்கு வேண்டாம்முன்னம் மன்மதன் பட்டதையும் காலன் வதையுண்டதையும் திரிபுரம் நீறுபட்டதையும் நினவுருத்தி இந்திரன் முன்னெரு எந்திழையாளேக்கூடி இழிகுறி பட்டதும் சந்திரன் தார்குழல் தாரையாளால் வெந்துயரத்தாழ்ந்ததும் பிறனில் காமுற்றதினுலன்ரேவெனச்சொல்லி பலவாறுதடுத்தனள் யுத்தத்துக்கு போதல் கூடாதெனவும்மறுத்தனள். அங்ஙனம் அனேக துர்சகுனங்களும் உண்டாயினவெனினும் ஒன்றையும் லக்ஷியம் செய்யாது அநேக அசுர வீரர்கள் ஏறிய ரதங்களால் சூழப்பட்டவனுய் நக்ஷத்திரங்களால் சூழப்பட்ட சந்திரன் போல் நான்குவித சேனேகளோடும் ஜலந்தரன் யுத்த சன்னகத்தோடு கைலேயை நோக்கி புறப்பட்டனன். அவ்வசுரேந்திரனேப் பார்த்தவஜ்ஜிராயுதன் முதலிய தேவர்கள் கைலங்கிரி கடவுளாம் காலகாலனேக்கண்டு ஏ கிருபாநிதே! இப்பொழுது எங்களுக்கு உண்டாயிருக்கிற ஆபத்திலிருந்து ரக்ஷிக்கிற நிமித்தம் சமுத்திர குமாரனுன ஜலந்தரனே தாங்கள் சீக்கிரம் ஜயிக்கவேணும். ஏ சரணுகதவத்ஸலா! சரணமடைந்த எங்களே காப்பாற்றுதல் தங்களது கடமை அன்றோ என பிரார்த்திக்கிற தேவர்களதுமுன்பாக தேவேசனுனவர் ஸ்ரீ மகாவிஷ்ணுவைப்பார்த்துச் சொல்லுகிறுர். ஏ ஹரியே வருணகுமாரனுன ஜலந்தரன் ஏன் உம்மால் ஜெயிக்கப்படவில்லை என ஸ்ரீ ஹரியும் சுவாமின்! அவன் தங்களது அம்சபூதனுனதினுலும் லக்ஷ்மீதேவியினது சகோதர வாஞ்சையினுலும் பிரும்ம தேவனது வரபிரசாதத்தினுலும் நான் அவனேக் கொல்லவில்லை தாங்களே அவனே வதம் செய்தல் நலமென வுரைத்த புண்டரீ காக்ஷன்வார்த்தையைக் கேட்ட மகேசுவரன் புன்சிரிப்புடன் கூடியவருய்த் தேவர்கள் முதலிய யாவரையும் அவரவர்கள் சுவஸ்தானம்போய்ச் சேரும்படி அனுமதி

கொடுத்துவிட்டு தனது பிரமதகணங்களான நந்தி விநயகர் * சுப்பிரமணியர் முதலானவர்களைப் பார்த்து ஜலந்தரனோடு யுத்தம் செய்யும்படி உத்திரவளித்தனர். அவ்வாறே கணபதி ஸ்கந்தர் முதலிய கணாதிபர்கள் பேரீ சங்கம் தாரை தப்பட்டை முதலிய வாத்தியங்கள் முழங்க பர்வதத்தின் தாழ்வரையில் அசுரசேனையோடு யுத்தம் செய்ய ஆரம்பித்தனர். பேரீ காகளம் முதலிய வாத்திய தொனிகளாலும் இருக்ஷிக்காரர்களுடைய வீர வாதங்களினாலும் தனுஷ்டங்கார ஒலியினாலும் பூமியும் ஸப்தகுலாசரங்களும் நடு நடுங்கும்படி சத்தமுண்டாயிற்று இவ்வாறுஸ்கந்தர் முதலிய தேவர்களால் யுத்தத்தில் அடிக்கப்பட்ட அசுர சைனியங்களை சுக்கிரபகவான் அமிருத சஞ்சீவி என்னும் மகா மந்திரத்தால் உயிர்ப்பித்து வந்தனர். இவ்வாறு உயிர் பெற்றுவரும் அசுர சைனியங்களைக்கண்ணுற்ற தேவர்கள் (கணாதிபர்கள்) மிக்க வாடி பரமசிவனைத் தேடி இனிய தோத்திரங்களால் பாடியகாலையில் தேவேசன் கிருபையால் பனைமரம் போன்ற கால்களும் இருப்புலக்கை போன்ற கைகளும் பிலத்துவாரம்போன்ற வாயும் அக்கினிகுண்டம் போன்றகோர நேத்திரங்களும்கறுத்த காத்திரமும் யுத்தபாத்திரமுமான ஓர் ஸ்திரீ ரூபம்உண்டாகி ரணகளத்தில் இருக்கிற அரக்கர் யாவரையும் பக்ஷித்து சுக்கிரனை தனது கால்களின் இடையே அடக்கிகொண்டு ஆகாயத்தில் மறைந்துவிட்டதைக்கண்டு அசுரசைனியங்கள் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு ஹாஹாகாரம்பண்ணிக் கொண்டு அசுர சேனைகள் பெருங்காற்றினால் அடிபட்ட தூசிபோல் ஓடுகிறதைக்கண்ட சும்பன் நிசும்பன் காலநேமி முதலிய ராட்சஸ வீரர்கள் தங்கள் சேனைகளுக்கு பயமில்லாமலிருக்கும்படி வருஷாகாலத்து மேகம்போல் பாணவருஷங்களை பொழிந்தார்கள். அப்போது சிவ சேனைகள் அசுரர்களது பாணவருஷங்களைத் தாங்கமாட்டாமல் பின்னிட்டு ஓடுவதைக் கண்ட நந்தி விநயகர் ஸ்கந்தர் வீரபத்திரர் பைரவர் மகாகாளர் சாஸ்தா கூர்மாண்டர் ஆடகேசுவரர் காலாக்கினிருத்திரர்குண்டோதரர் கும்போதரர், பானுகம்பர் சங்கன்னர், இன்னும் பதினொரு ருத்திரர் முதலிய சேனாதிபர்கள் அரக்கர்களை யுத்தத்தினால் தடுத்து தேவசேனைகளை பயத்திலிருந்து விடுத்தார்கள்.

* சுப்பிரமணியருடைய உற்பவம் இச்சரித்திரத்திற்கு பிந்திநடந்ததாக சிலபுராணங்களில்சொல்லியிருப்பினும் இப்புராணத்தில் சுப்பிரமணியரும் யுத்தத்திற்கு சென்றதாகவேயிருக்கிறது.

## 7-வது அத்தியாயம்.

சிவ ஸைனியங்களுக்கு நாயகர்களான நந்தி முதலியவர்கள் முறையே ஒருவருக்கொருவர் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். சேனாய் தக்கனே நந்தியும் காலனேமியும், சும்பனும் கணபதியும், நிசும்பனும் மயூரவாகனனுமாக ஒருவருக்கொருவர் அதிகோலாகலமாக யுத்தஞ் செய்கையில் நிசும்பன் ஷண்முகனது மயூரத்தை ஐந்து பாணங்களினாலும், ஸ்கந்தனை சக்தி என்னும் ஆயுதத்தாலும் அடித்தனன் காலநேமியை நந்தியின் தனுசை ஒடித்து வேறு ஐந்து பாணங்களினால் ரதம் குதிரை சாரதி முதலியவைகளை அடித்தான். அதுகண்ட கணேசன் சும்பனுடையமார்பை ஒன்பதுபாணங்களால் அடித்து, அவனது சாரதியை மூன்று பாணங்களால் முடித்து, வில்லையும் ஒடித்து, வீரவார்த்தைகள் படித்தனர். உடனே சும்பன் திடீரென கீழே குதித்து வேறுஓர்ரதம்ஏறி அறுபதுபாணங்களால்விநாயகரையும்ஒன்பது பாணங்களால் மூஷிகத்தையும் அடித்து அட்டகாஸம்செய்தான் அதுகண்ட கணபதி மிகுந்த கோபாவேசங் கொண்டு பரசு என்னும் ஆயுதத்தால் சும்பனுடையமார்பைப்பிளந்து பூமியில்தள்ளி அட்டஹாஸம் செய்தார். இதுகண்டகாலநேமிநிசும்பன் இருவர்களும் கணபதியை நாலுபக்கங்களிலிருந்தும் பாண வர்ஷங்களினால் பீடித்தார்கள். அதுகண்ட வீரபத்திரர் ஓடிவந்து அரக்கர்களை பல பாணங்களால் அடித்து விக்னேசுவரரை சத்துருக்களிடமிருந்து விடுவித்து தன்னுடன் வந்த பூத பிரேத கூழ்மாண்டாதிகளுக்கு அரக்கர்களை இரையாக்கினர். அசுர சேனைகள் வீரபத்திரருடைய கரவேகத்தையும் சரவேகத்தையும்பொருக்கமாட்டாமல் பெருங்காற்றினால் அடிபட்ட மேகத்திரள்கள்போல் திக்குதிக்காய் நாலு பக்கங்களிலும் ஓட ஆரம்பித்தன; இதை தூதுவர்களால் அறிந்த ஜலந்தரன் மிக்கச்சினந்து யுத்த வேடம் பூண்டு ரதம் குதிரை யானை காலாள் முதலிய நால்வித சேனைகள் சூழ பேரீ முதலிய வாத்தியங்கள் ஒலிக்க ரண பூமியைக் குறித்துவந்து இரண்டு சேனைகளும் சிம்மனதம் செய்யும் காலத்தில் ஜலந்தரனுடைய பாணங்களினால் பூமி மத்திய பாதாளமாகிற மூன்று லோகங்களும் மறைக்கப்பட்டன. அச்சமயத்தில் ஜலந்தரன் கணபதியை ஐந்து பாணங்களாலும் நந்தியை ஒன்பது பாணங்களாலும் வீரபத்திரரை இருபது பாணங்களாலும் அடித்து அட்டஹாஸஞ் செய்யும் அசுரே

திரனைக்கண்ட ஸ்கந்தர் தனது சக்தியால் அவனது மார்பில் தாக்க அதினால் அதிக வருத்த முறாமல் தனது கதையால் குகனையும் அவ்வாறே சிலாதன் மதலையையும் அடித்துத் தள்ளினான். அதுகண்ட விக்னராஜன் மிக்கச்சினந்து தனது அங்குசத்தால் ஜலந்தரன் கதையை வெட்டித் தள்ளினார். உடனே வீரபத்திரர் ஓடிவந்துமூன்று பாணங்களால் ஜலந்தரன் மார்பையும் ஏழு பாணங்களால் கொடை கொடி இவைகளையும் அடித்து ஒருபாணத்தால்வில்லை ஒடித்து மற்ற இரண்டு பாணங்களால்ச் சாரதியையும் முடித்தனர். உடனே அசுரகுலராஜன் அதிககோபங்கொண்டு மீசை துடிக்க பற்களை நறநறவெனக் கடித்து அதிகரேமான சக்தியென்னுமாயுதத்தை எடுத்து ஓடிவந்து கணபதியை அடித்துக் கீழே தள்ளிவிட்டு வேறு ரதம் ஏறி யுத்தத்திற்கு வந்ததைக் கண்ட வீரபத்திரர் அதிகோபத்துடன்கூட சூரிய காந்திக்குச் சமானமாய்ஒருவரோடொருவர் யுத்தம்செய்துவருகையில் வீரபத்திரர் ஐந்து பாணங்களால் ஜலந்தரனதுதேர்குதிரை இவைகளை அடித்து வில்லை ஒடித்துஅவனது மார்பைப் பிளந்தார். அப்போது அரக்க அரசன் அதிசினங்கொண்டு வீரபத்திரரைக் கொல்ல உத்தேசித்து பரசு என்னும் ஆயுதத்தை எடுத்து அதிவேகமாய் ஓடிவந்து வீரபத்திரரது திருமுடியில்ப் பலமாகச்சாடினான். அவ்வடி பொருக்கமாட்டாமல் ரத்தவெள்ளம் பெருக பூமியில் மூர்ச்சையாக விழுந்தார் சிவ சைன்யநாதர்.

## 8-வது அத்தியாயம்.

இவ்வாறு கீழே விழலான வீரபத்திரரைக் கண்ட சிவ சேனைகள் நாலாபக்கங்களிலும் ஓட ஆரம்பித்ததைக்கண்ணுற்றமற்ற கணாதிபர்களான, பைரவர், ஐயனார், மகாகாளர், ஆடகேசுவரர், காலாக்கினிருத்திரர், குண்டோதரர், கும்போதரர், பானுகம்பர், சங்ககன்னர் முதலிய தேவர்களும் முறையே யுத்தஞ்செய்து அரக்க அரசனால் அடியுண்டு மூர்ச்சை யடைந்து ரணரங்கத்தில் கிடப்பதை அறிந்த ஜலந்தரன் ஸ்ரீகைலாசத்தில் தேவேசனை எதிர்க்க அவரது திருமாளிகையை நோக்கிபுறப்பட்டனன். இவிடம்இங்ஙனமிருக்க யுத்தகளத்தில்மூர்ச்சையடைந்து விழலானகணபதிஸ்கந்தர் வீரபத்திரர் முதலிய கணாதிபர்களுடைய விருத்தாந்தங்களை அறிந்த அம்பிகையானவள் ஸ்ரீ மகாவிஷ்ணுவைநினைத்தமாத்திர

த்தில் அவர் பிரத்யக்ஷமாயினர். அவரைப் பார்த்துபராசக்தி ல்லுகிறாள் ஹேவிஷ்ணுவே! ஜலந்தரனது யுத்தத்தில் க முதலிய கணாதிபர்கள்தோல்வியடைந்துவிட்டார்கள். பரமசி விடைவாகனத்தின் மீது யுத்தத்திற்கெழுந்தருளி யிருக்கிறா என்பது முதலிய விருத்தாந்தங்கள் உமக்குத் தெரியாதா வென கேழ்க்கலுற்ற விஷ்ணுவானவர் அவனது பத்னியான பிருந்தை என்பவளின் பதிவிருதா மகிமையால் அவன் சாகவில்லை, அதைக் கெடுத்துவிட்டால் அவன் மகாதேவனால் வதமாய் விடுவான் என்றுசொல்லிய ஸ்ரீ ஹரியின்வார்த்தையைக்கேட்ட அம்பிகையும்அவ்வாறே செய்யும்படி அனுமதிகொடுத்தனள். உடனே விஷ்ணுவானவர் ஜலந்தர பட்டணம்போய்ச்சேர்ந்தார்.

இவ்விருத்தாந்தங்களை யறிந்த சதாசிவன் மந்தஹாஸமுகத்தினராய், வீரபத்திரர் முதலிய மகாபிரதாப சாலிகளான சாம்பவ வீரர்களையும், மகத்துவம் பொருந்திய ருத்திரகணங்களையும் யுத்தரங்கத்தில் பங்கப்படுத்தியும், அசுரகுலகாலனும் மகாஜெயபிரதாப சீலனும் அதிபலிஷ்டனுமான ஸ்ரீமகாவிஷ்ணுவோடு இருபத்தி நாலாயிரம் வருஷம் அதிகோரமான யுத்தம் செய்தவனுமான ஜலந்தரனோடு தான் நேரில்யுத்தம் செய்து அவனது பலத்தைப் பரிசோதிக்க திருவுளங்கொண்டு புரமூன்றையும் புன்னகையால் எரித்த புராரி புன்சிரிப்போடு கூடினவராய், சங்ககன்னர்,பானுகம்பர், குண்டோதரர், கும்போதரர், ஆடகேசுவார், பதினொருகோடி ருத்திரகணங்கள் முதலிய சிவசைன்னியங்கள் புடைசூழவிடைவாகனத்தின் மீது ஏறி சிவசேனைகள் ஜெயவிஜயீபவா எனக் கொண்டாட பேரிகாகளம், சங்கம் முதலிய பல வாத்தியங்கள் கோஷிக்க யுத்தபூமியை நாடி ஜலந்தரனைத் தேடிவந்து கொண்டிருந்தனர் காலகாலனும் கபாலமூர்த்தி.

இவ்விடம் இங்ஙனமிருக்கையில் யுத்தபூமியில் கீழேவிழலான வீரபத்திரர் முதலியவர்களைக் கண்ணுற்ற சிவசேனைகள் அசுரர்களின் பாணங்களாலடிபட்டு பயத்தினால்யுத்தபூமியைவிட்டுக்கதறிக்கொண்டுஸ்ரீ மகாதேவனைவந்தடைந்தவைகள் ஸ்ரீமாதேவனே நேரில்யுத்தபூமியைநாடி வருவதைத்தெரிந்து புதிதாக வருகிற சிவசைன்னியங்களுடன் கலந்து முகம் மலர்ந்து, சிம்மனாதம் செய்து கொண்டு, அதிபலத்தோடும் மெத்த உற்சாகத்தோடும் மறுபடியும் யுத்தஞ்செய்ய ஆரம்பித்த காலையில், முன்பு யுத்தபூமியை

விட்டு ஜெயசீலர்களாய் அதிசந்தோஷத்துடன் திரும்பியராக்ஷஸசைன்னியங்கள் சிவசேனாதிபர்களின் பாண வருஷங்களாலடியுண்டு, சிவபுண்ணியம் செய்தவர்களைக் கண்டபாபங்கள் போல் நாலுபக்கங்களிலும் திக்கு விதிக்காய் ஓட ஆரம்பித்தன. அது கண்ட ஜலந்தரன் தன் சேனைகளுக்கு பயநிவர்த்தி செய்யும் பொருட்டு, சும்பன், நிசும்பன், காலநேமி, முதலிய அரக்கவீரர்களை தக்கபடைத்துணையுடன் யுத்தத்திற்கு ஏற்பாடுசெய்தனுப்பினன். சிவசைன்னியங்களும், அசுரசேனைகளும் ஒன்றோடொன்று கலந்து யுத்தஞ்செய்கையில் அசுரசேனைகள் தேவசேனைகளுக்கு எதிர் நிற்கமாட்டாமல் ஓடுவதை அறிந்த சும்ப நிசும்பர்கள்மாயையால் ஸ்ரீதேவசேனை மோஹிப்பிக்க வெண்ணிஅதிரூப சௌந்திரியமுள்ள வோர்மாயாஸ்திரீரூபத்தை தரித்து ஸ்ரீ மகா தேவனைமாயையால் மயக்கி யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது எல்லாம் வல்லமகாதேவன் அதை அசுரமாயையென்று அறியாது ஸ்திரிகளுடன் பூமான்கள் யுத்தஞ் செய்வதை சற்று யோஜித்து பிறகு அசுரமாயை யென்று அறிந்து பெண்ரூபத்துடனிருந்த சும்ப நிசும்பர்களைப்பார்த்து ஏ,ராக்ஷத அதமர்களே! நீங்கள் யுத்தரங்கத்தில் நியாய விரோதமாய்நடுயுத்தத்தில் ஸ்திரீரூபம் தரித்தமையால் நீங்கள் ஸ்திரீயினால் ரணரங்கத்தில் வதத்தை அடையக் கடவீர்களென்று சாபம்செய்து விட்டுரணபூமியை விட்டுத் தனது திருமாளிகையைநோக்கி சென்றுவிட்டனர்.

இவிடமிவ்வாறிருக்கையில் கைலையங்கிரியை விட்டு ஸ்ரீமகேசுவரன் யுத்தரங்கத்திலிருக்கிறார் என்கிறவிருத்தாந்தத்தை தூதர்களாலறிந்த ஜலந்தரன், முன்னம் நாரதர் உரைத்தவார்த்தையால், காமாந்தகாரத்தில் மூழ்கி மேனிமுழுதும் இளைத்து, சதா அம்பிகையின் தியானத்தினாலேயே மனங்களைத்து, எவ்வாறாவது அத்தேவியைக் கவர்ந்துபோக நினைத்து சமயம்பார்த்து வருவதால் இதுதான் தக்க சமயமெனவறிந்து, கைலையை நாடி அம்பிகையிருக்கும் அந்தப்புரத்தைத்தேடி மாயையால் பரமசிவனது உருவங்கொண்டு, உமாதேவியின் எதிர்நின்று, அத்தேவியின் ரூபலாவண்யங்களைப் பார்த்து, தேகம்வேர்த்து காமாந்த காரத்தால் கள்ளுண்டவன் போல் நின்றநிலை பெயராது பிதற்றவாரம்பித்தனன், இதுகண்டமலைமகள் மெய்சிலிர்த்து நடுநடுங்கி பிறகு அரக்கன்மாயை யெனவறிந்து அந்தர்த்தியானத்தையடைந்து

மானஸ்சரஸைச் சேர்ந்து மகாதேவனைத் தியானம்செய்துகொண்டிருந்தனள். அவ்வரக்கவரசனும்அச்சுந்தரியைத்தன்முன்காணாது மதிமயங்கி எங்கும் தேடிக்காணாது ஒன்றும் தோணாதுஓடி ஆடிசலித்துபிறகு யுத்தபூமியை அடைந்து ராக்ஷஸசேனைகள் பாணவருஷங்களால் அடியுண்டு மாண்டுகிடைப்பதையுங் கண்டு, மிக்கவிசனங் கொண்டு, அங்கு பரமசிவனைக் காணாது வேறு ஒன்றும்தோணாது ஸ்ரீதேவேசனை எதிர்க்க யுத்தசன்னகத்தோடு, கைலாயத்தை நோக்கிபபுறப்பட்டனன்.

இவ்விடம்இவ்வாறிருக்கையில் ஜலந்தரன் பார்யை பிருந்தை என்பவள்தனது பர்த்தா எண்ணைத்தலையோடுகிடாமாட்டின் மீதுஏறி தெற்கே போவதாகவும்தனதுபட்டணம்சமுத்திரத்தில் முழுகிஅழிந்து போனதாகவும்கனவு கண்டு விழித்துச் சூரியஉதயமானதைக் கண்டுதிகைத்து அச்சூரியன் உடைந்தும் மத்தியில் ஒளிமழுங்கியுமிருப்பதாகவுங்கண்டு மருண்டு விதியைநொந்துபுரண்டு இவைகள் நமக்குப்போறாதகாலத்தின் குறிகளெனவாடி தனது சகிகளுடன்கூடி அதன்பரிஹாரங்களைத்தேடி கவலையால் மிக்கவாடி பொழுதுபோக்குக்காகதத்னதந்தப் புரத்தின் பக்கத்துள்ள உத்தியானவனத்தைநாடிசேடிகளுடன்உரையாடிவருகையில், முன்புஜலந்தரபுரத்தையடைந்த மகாவிஷ்ணுவானவர் இந்தஉத்தியானவனத்தையடைந்து தனதுமாயையால் ஓர் தவமுனிவேடங்கொண்டு ஓரிடத்தில் தவஞ்செய்பவர்போல் கண்களை மூடிக்கருத்தைப்பிருந்தையின்வருகையில்நாடி மௌனமாயிருந்தனர்.

அப்போதுவிஷ்ணுவின் இரு பாரிஷதர்கள்இவ்வாறாக உத்யானத்தில் உலாவலான அசுராங்கனையைக்கண்டு இது தான் நல்ல சமயமெனக்கொண்டு இரண்டு அரக்கர்களினுருவங்களைக் கொண்டு துரத்தினர். அதனால்அம்மாதுவெருண்டு மிக்கப்பயந்து ஓடி, அங்குஓரிடத்தில் மௌனமாக இருந்த மாயரிஷியாகிய மாதவனைநாடி ஏமுனிவ! அபயம், அபயம்! நின்னைசரணமடைந்தேன் காப்பாற்றவேண்டும், நின்னை அடைக்கலமாக அடைந்த என்னை காப்பாற்றுவது நினதுமுறைமையன்றோவென ஓலமிட்டோடிவந்து மாயாமுனிவர் பாதத்தில் விழுந்துபலவாறு பிரார்த்தித்தனள். உடனேமுனிவர் கண்களைத் திறந்துபார்த்து அசுராங்கனையைக்கண்டு ஆனந்தங்கொண்டு, அவ்வரக்கர்களைப் பார்த்து ஓர் ஹூங்காரஞ்செய்து அவர்களை மாயமாய் மறைந்து

போகும்படிசெய்து அவ்வணங்கையும் சமாதானஞ்செய்தனர். அப்போது பிருந்தையானவள் அம்முனிவரைப்பார்த்து, ஏமுனி புங்கவா! எனதுபர்த்தாவான ஜலந்தரராஜன் ஜெகத்பிரபுவாகியபரமசிவனுடன் யுத்தஞ்செய்ய கைலேக்குச் சென்றனர் அங்கு அவரது விருத்தாந்தங்கள் ஒன்றும் இதுகாறும் தெரியவில்லே. மேலும் என்னுல் அநேகதுர்ச்சொப்பனங்களும் துர்ச்சகுனங்களும் காணப்படுகின்றன. மெத்தபயத்தையடைந்தவளாகிறேன். ஆதலால்அவர் இப்போது யுத்தரங்கத்தில் என்னசெய்துகொண்டிருக்கின்றனர். ஜயத்தையடைந்து சுகமாய்வந்துசேருவாரா? இவற்றை தயைபுரிந்து எனக்குச்சொல்லியருளவேண்டுமெனக் கேட்டனள். அப்போது அம்மாயாமுனிவர் ஆகாயத்தை நிமிர்ந்துபார்த்தகாலேயில் இரண்டுதூதர்கள் எதிர் தோன்றினர். அவர்கள் இவரதுபுருவ ஸமுக்ஞையால் ஆகாயத்தில் மறுபடிமறைந்துவிட்டனர். சற்றுநேரம்சென்றபிறகு இரண்டுதுண்டாய் தலே வேறு உடல்வேருகவெட்டுண்ட ஜலந்தரனது சரீரத்தைகுரங்கு உருவங்களுடன் தூக்கிவந்து பிருந்தையின் முன்னர் வைத்தனர். அது கண்டு பிருந்தை பர்த்தா மரணமடைந்த விசனத்தால் பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்ததைக் கண்ட மாயாமுனிவர், தனது கமண்டலத்திலுள்ள தீர்த்தத்தால் புரோக்ஷித்து அவளது மூர்ச்சையைத்தெளிவித்தனர். அப்போது அவ்வசுரகுலமாது தனது புருஷனதுமுகத்துடன் முகம்வைத்துஅழுதும்,தரையில் விழுந்து புரண்டும், மார்பிலும் தலேமேலும் அடித்துக்கொண்டு மாருத்துயரத்துடன் அக்கினிப்பிரவேசஞ்செய்ய ஆயத்தமாய் முனிவரைப் பார்த்துச்சொல்லுகிருள். ஏமுனீந்திரா! எனது புருஷனே ஜீவிக்கச்செய்ய உமக்கு சக்தியிருக்குமென்று நினைக்கிறேன். அவ்வாறு செய்யவேண்டும் என்று அதிவினயத்துடன் பலதரம் மன்ருடிக்கேட்டுகொண்டனள்.

அப்போது முனிவர், ஏ பிருந்தே! உனது புருஷன் ஸ்ரீபரமசிவனுல் வதம் செய்யப்பட்டனன் அவனேப் பிழைக்கும்படி செய்வது மிக்கவரிது. உன்னுடைய பிரார்த்தனேயால் மிக்கசந்தோஷித்தேன். ஆதலால் இவனேப் பிழைக்கும்படிசெய்யலாமென நினைக்கிறேன் என்றுசொல்லி ஜலந்தரனுடைய சரீரத்தில் தாம் புகுந்து எழுந்தார். முனிவரும் மாயையால் மறைந்தனர். உடனே பிருந்தை தனது புருஷன் உயிர்பெற்று எழுந்ததாக நினைத்து அடங்காத ஆனந்தத்துடன் அவனேக்கட்டிமுத்தமிட்

டனள். இருவரும் அதிக ஆனந்தத்துடன் சரஸம் செய்துகொண்டு அநேகநாள் அங்கேயே வசித்துவந்தனர். பிருந்தையும் இறந்த புருஷன் உயிர்பெற்றுவந்தானென நினைத்து அதிக ஆனந்தத்துடனும் ஆசையுடனும் அடிக்கடிரமித்துக்கொண்டும் வந்தனள்.

## 9-வது அத்தியாயம்.

இவ்வாறு ஜலந்தர ரூபியான விஷ்ணுவானவர் வெகுகாலம் வரையில் தனது இச்சையின்படி காமநூல்களிற்ச்சொல்லியவாறு காலம் சென்றது கூடத்தெரியாது போகங்களை அநுபவித்துவந்தனர். அப்போது ஒருசமயம் போகத்துக்கு முடிவில் இவர் தன் புருஷனல்ல விஷ்ணுவென்று அறிந்து பயந்து அதிகோபத்துடன் ஸ்ரீபரந்தாமனைப் பார்த்துச் சொல்லுகிறாள். ஏ விஷ்ணுவே! உமதுநல்லநடத்தையைபரஸ்திரீகமனதோஷத்தால்சுடவேணும். மன்மதாவேசத்தினால் லஜ்ஜையில்லாமல் மாயையால் என் புருஷனது சரீரத்தில் நுழைந்து என்னைவஞ்சித்து பரஸ்திரீ கமனஞ் செய்தீரே: அதனால் நீர் மறுஜென்மத்தில் மானிடஜென்மம் எடுத்துஅதில் எந்தஅரக்கர்களால் என்னை பயமுறுத்தினீரோ அவர்களே உமக்கு சத்துருக்களாய் உமதுபத்தினியைக்கவர்ந்து கொண்டு போகக்கடவது அதினால்நீர் துக்கத்தையடைந்து வருந்தி அலைந்துதிரியவும் எந்தகுரங்குகள் உமக்காக என்புருஷனது உடலைச் சுமந்து வந்தனவோ அக்குரங்குகளே உமக்குத் தோழர்களாகவுங்கடவதுஎனச்சபித்துவிட்டு, விஷ்ணுஇனியவசனங்கள் அநேகம்சொல்லி பலதரம் தடுத்தும்கேட்காமல் அக்கினிப்பிரவேசம்செய்துவிட்டனள். இவ்விதம் அக்கினியில் விழுந்து இறக்கலான பிருந்தையின்விடாமோகத்தால் விஷ்ணு மிக நொந்து அவளது பிரிவாற்றாமல் அவிடம்விட்டு நகராமலும், அவளதுசாம்பலிலேயே புரண்டுகொண்டும் எப்பொழுதும் அதே தியானமாயிருந்துகொண்டுவந்தார்.

அக்காலையில் பிர்ம்மாதி தேவர்கள் வந்து அனேகவிதமான தோத்திரங்கள்செய்தும் சமாதானங்கள்சொல்லியும் மாதவனுக்குமனோநிச்சயம்வரவில்லை.

இப்பிருந்தையென்னும் பதிவிரதையின் சாபத்தாற்றான் ஸ்ரீமகாவிஷ்ணு இராமாவதாரம் எடுக்கும்படிநேர்ந்ததும் அதில்

விஷ்ணுபாரிஷதர்களான ஜெயவிஜயாளென்பவர்கள் அரக்கர்களாக ஜனித்து ராவணகும்பகர்ணர்களாகி சீதையைக்கவர்ந்துசென்றதும் அனுமான் சுக்கிரீவன் முதலிய கபிகளின் நட்புக்கொண்டதும் கேளுங்கள் சௌனகாதிமுனிவர்களேயென்று சூதர் சொல்லிவருகிறார்.

இவிடமிங்ஙனமிருக்க ஸ்ரீகைலாயத்தில் தேவேசனை எதிர்க்க அவரது திருமாளிகையைநோக்கிப் புறப்பட்டஜலந்தரனதுசெய்கையையறிந்த சதாசிவன் மந்தஹாஸமுகத்தோடு இவ்வரக்கனை ஓர்லீலையாகக்கொல்லநினைத்து ஓர்சிவயோகிவேடம்பூண்டு காலில் பாதுகையும், கையில் ஜெபமாலையுங்கொண்டு முப்பிரிநூலும் யோகப்பட்டையும் மார்பிலிலங்க, விபூதிருத்திராட்சங்கள் திருமேனியெங்கும் விளங்க, வியாக்கிராஸனம்பூண்டு, இந்திராதிவானவர் சீடர்களாய்ப்பின்வரத்தன்னைநோக்கிவரும் அசுரேந்திரனை எதிர்கொண்டு அவனதுசமீபஞ்சென்று நீயாரப்பா? எங்கேபோகிறாய்? எனவினயமாய்க்கேட்டருளினர் முத்தொழிலுமியற்றும் முதல்வன்.

உடனே ஜலந்தரன் பரிகாசத்தால் சிரித்து திருலோகங்களிலும் பிரக்கியாதியடைந்த ஜலந்தரனென்னும் அசுரேந்திரன் யான்என்பது தெரியாதா? சகல தேவர்களையும் ஜயித்துவிட்டேன், தேவேசனை கைலாசவாஸி காலகண்டனைஎதிர்த்து அவரைஜயிக்க இவ்விடம்வந்தேனென அதிக கர்வத்தோடு மொழியலுற்ற அரக்கனைப்பார்த்து பரிகாசமாய்ச்சிரித்து, உலகத்திலுள்ள சகலமான வீரர்களையும் நாசஞ்செய்கிறவனும் பினாகமென்னும்பெரும்வில்லையும் சூலத்தையும் தரித்தவனுமிருக்கிறஅந்தச்சம்புவை எவர்கள் பஜிக்கிறார்களோ அவர்களையே எவன்ஜயிக்கவேணுமென்கிறவெண்ணங் கொள்ளுகிறானோ அவனே அவமானமடைகிறான் என்றால் அவரைநேரில் ஜயிக்கவல்லவன் இத்திருலோகத்திலும் எவனிருக்கிறான். நான்எப்போதும் அம்மகேசுவரனது சமீபத்திலேயேயிருப்பவன், அவருடைய மகிமைகளெல்லாம் எனக்கு நன்றாயத்தெரியும், நீஇன்னும் உயிருடனிருக்க எண்ணமுள்ளவனானால் இப்படியேதிரும்பி உனதுஊர்போய்ச்சேர் இல்லாவிடில் எமலோகம்போய்ப்பார் என்கிறபிராமணன் வார்த்தையைக்கேட்ட ஜலந்தரன் கோபச்சிரிப்பாகச்சிரித்து, ஏ மூடனானபிராமணனேகேளும் அதிகமேன்மைபொருந்திய என்னுடைய பலம் உமக்குத்தெரியாது.

ஒருக்கால் இந்திராதிபாலர்களையும் விஷ்ணுமுதலியதேவர்களை யும் யுத்தத்தில் ஜயித்தேன், அவர்களது ஸ்தானங்களில் அரக் கர்களை அமைத்தேன், எனது பட்டணத்தில் அவர்களைப் பல வேலைகளிலும் நியமித்தேன், வடவையைக் கையால்அணைத் தேன், சமுத்திரத்தை இருகைகளால் இறைத்துவற்றடித்தேன், மம்மேருவை வேருடன்பெயர்த்து ஆகாயத்திலெறிந்தேன், தேவ ர்களுக்கு அவிர்பாகம் கொடுப்பதைத்தடுத்தேன், அரக்கர்களு க்கு வேண்டிய பதவிகளைக்கொடுத்தேன். ஆகையால் ஏ பிரா மணா! என்பலத்தை நீர் அறியமாட்டீர். இதோபாரும். தேவை யானால் இக்கயிலையங்கிரியைப்பெயர்த்து சமுத்திரத்தில் எறி வேன். மேருவை வில்லாக வளைப்பேன், சந்திரசூரியர்களின் கதி களை தடுப்பேன். என்பதுமுதலான வீரவார்த்தைகளைக்கேட்ட மகாதேவன் புன்சிரிப்புக் கொண்டு அதிபரபரப்போடுநிற்கிற அரக்கனைப்பார்த்து, ஆனால்உனது பலத்தைப்பார்க்கவெனக்கும் ஆசைதான். ஆதலால் இதோஎன்னால் வரையப்பட்டுள்ள கீற்றி ன் கீழுள்ள சக்கரத்தைப் பேயர்த்துஎடுத்து தலைமேல்வைத்துக் கொள்வாயேயானால் உனதுபலம்வாஸ்தவந்தான் நீயும் மகேசுவர னைத் தடையில்லாது ஜயிப்பாய் என்கிறசிவயோகியின்வார்த்தை யைக்கேட்ட அரக்கன் மிகவும் விளையாட்டாக அவரது கால்பெ ருவிரலால் கிழிக்கப்பட்ட தாம்பாளம்போலுள்ள வட்டமான புல்தரையான பூமியை இருகைகளால்பெயர்த்து வரவரஅதிகன மாவதைக்கண்டு ஆச்சரியம்கொண்டு வீரவார்த்தைகள்பலவிண்டு அதிகசிரமத்தோடு மார்புவரையிலேற்றிபிறகு தன்னைத்தேற்றிய காலையில் அம்மண்சக்கரமானது பரமனுடையதிருவருளால்விண் சக்கரமாய்அவனது *சிரத்தைக்கொய்துபூமியில்வீழ்த்திகடலில் முழுகிக்கலகண்டனது கையில்வந்துநின்றது. உடனே அவ்வரக் கன்இரத்தவெள்ளம்பெருக இந்திரனால் இரகுகள்வெட்டுண்டு விழுந்தபர்வதங்கள்போல் திடீரென்றுபூமியில்விழுந்து பிராண னைவிட்டான். உடனே தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள். தேவ துந்துபிமுழங்கிற்று. இந்திராதிதேவர்கள் ஆனந்தக்களிப்புடன் ஆரவாரித்து அவரவர்களிருப்பிடம்சென்றுசுகமாகவாழ்ந்துகொ ண்டுவந்தனர். பாக்கி அரக்கர் பாதாளஞ்சென்று ஒளிந்தனர்.

---

* ஸ்காந்தபுராணம் தவிரமற்றயபுராணங்களிலும், இப்புராணத்தி லும் தலையறுப்புண்டு மடிந்தான் எனச்சொல்லியிருக்கிறது. காந்தபுரா ணத்தில் மாத்திரம்இருபிளப்பாய் பிளக்கப்பட்டு மாண்டான் எனச்சொ ல்லியிருக்கிறது. எப்படியிருந்தாலும் கருத்து ஒன்றேயாதலால் சிரம் அறுப்புண்டுமடிந்தான் எனவேசொல்லப்பட்டது.

## 10-வது அத்தியாயம்.

இவிடமிங்ஙனமிருக்க விஷ்ணுவானவர் பிருந்தையின்மைய லால் சாம்பலில் உழன்றுகாமாந்தகாரத்தில் உன்மத்தன்போல் பிரக்ஞையற்றிருந்தனர். பிர்ம்மா முதலிய தேவர்கள் கண்டு அவரிடம் வந்து பலவாறு தேறுதல் சொல்லியும் தோத்திரங்கள் செய்தும் பயனடையாமல் கைலேயங்கிரியில் வீற்றிருக்கும் ஸ்ரீபரமசிவனிடம் சென்று தோத்திரஞ் செய்தார்கள். அப்போது பரமசிவன் பக்கத்திலிருந்த பார்வதியைத் தனது கடைக்கண்ணால் நோக்கிய காலேயில் அப்பார்வதியும் தனது இடதுகை சிறுவிரல் நுனியிலிருந்து ஒரு வித்தையெடுத்து பரமசிவன் கையில் கொடுத்தனள். அதைப்பார்வதி மணாளன் பிர்ம்மாதி தேவர்களிடம் கொடுத்து பிர்ம்மாவைப்பார்த்து ஓர் வார்த்தை சொன்னார். நீர் இவ்விதையைக் கொண்டுபோய் பிருந்தை எரிந்து சாம்பலாய்ப் போனவிடத்தில் விதைத்து தினந்தோறும் காலேமாலேகளில் அமர்த்தாரை பொழிந்து வருவீராயின் அதிலிருந்து ஒரு செடி உண்டாகும். அதற்குத் துளசியெனப்பெயர். அத்துளசிதேவியை விஷ்ணு மணந்துகொண்டு மோகத்திலிருந்து விடுபட்டவராய் தனது பரிபாலன கிருத்தியத்தைச் சரிவர நடத்திவருவார் என்றனர். உடனே பிர்மமன் முதலியதேவர்கள் பரமசிவனேயும் பார்வதியையும் வந்தித்துவிடை பெற்றுப் போய்அவ்வாறேசெய்ய, அவ்விடத்திலுண்டான * துளசிதேவியை விஷ்ணுவானவர் அதிமோகத்துடன்தழுவி மணந்து கொண்டும்அவளிடத்தில் அதிகப்பிரேமையுடன் மாலேயாய் அணிந்து கொண்டும் எப்போதும் போல் வைகுண்டம் சேர்ந்து தனது பரிபாலன கிருத்தியத்தை சரிவர நடத்திக்கொண்டு வந்தார். கேளாய் தக்கனே ஆதலால் இவ்வாறு மகத்துவம் பொருந்தியமகேசுவரனுடைய மகிமைகளே நீ எள்ளளவும் அறியமாட்டாய். அம்மகேசுவரனில்லாமல் உனதுயாகமும் பயனற்றதாக முடியும் உன்னால் அழைக்கப்பட்ட இத்தேவர்களும் கஷ்டத்தையடையபோகிறார்கள், நீ சுகத்தை யடைய விரும்பினால் இப்போதே அவரையழைத்து வந்து உபசரித்து

---

* இவ்வாறு துளசியுண்டான தினந்தான் பிருந்தாவனத்துவாதசியென்றும் யோகீஸ்வரதுவாதசியென்றும் பலபெயர்களால் சொல்லப்படுகிறது. அதைப் பற்றிவிரிவாய் பத்ம்புராணத்தில் காணலாம்.

அவிர்ப்பாகம் கொடுக்கக்கடவாய். இல்லாவிடில் நீ நாசத்தை யடைவது நிச்சயம் முக்காலும் சொன்னேன். எனப்பலவாறு சொல்லியும் கேளாததால அதிக கோபங்கொண்டு, உனதுயாகம் பயனற்றதாக ஆகக்கடவது. உனதுயாகத்தில் வீரபத்திரரால் நீதலையறுபட்டு மரணத்தையடைவாயாக எனச்சபித்துவிட்டு, தனது சீடர்களுடன் ததீசிமுனிவர் யாகசாலையைவிட்டுபுறப்பட்டு தனது ஆசிரமத்தை நோக்கிச் சென்றுவிட்டனர். கேளுங்கள் சௌனகாதிகளே; அதன்பின் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லுகிறேன் கேட்க வேண்டுமெனச் சூதர் சொல்லிவருகிறார்.

ஒருநாள் ரிபு சக்கிரவர்த்திக்கும் சிவயோகியான ததீசி முனிவருக்கும் அந்தணர் பெரியோரா அரசர் பெரியோரா வெனவெழுந்தவாக்குவாதத்தில் மகாவிஷ்ணுவானவர் அம்முனிவர் மீது ஏவியசுதரிசனமென்னும் சக்கரமானது அவர்மேல் பாய்ந்துபலமிழந்து பயனற்று தூள்தூளாய்க் கீழே விழுந்ததையறிந்தவிஷ்ணு அதிவருத்தத்தையடைந்து இது சிவாபராதத்தால் தான் அடைந்தகெடுதி யென அறிந்து சக்கரத்தை இழந்து திருவீழிமழலையென்னும் ஸ்தலத்தை அடுத்து பரமசிவனைக்குறித்து பன்னாள் தவம்புரிந்து தினம்தினம் ஆயிரத்தெட்டுபுண்டரீகமென்னும் பொற்றாமரை மலரால் பூஜித்து வருநாளில் ஒருநாள் பரமசிவனது திருவருளால் பாதி அர்ச்சனைசெய்கையில் ஓர் புஷ்பம் குறைவுற்றது கண்ட கமலக்கண்ணன் தனது கண்களில் ஒன்றைப்பிடுங்கி அர்ச்சித்த காலையில், பரமசிவன் பிரத்தியட்சமாய் ஜலந்தர ஸம்ஹார விஷயமாய்ச் சிருஷ்டித்த சக்கரத்தை ஈந்து அன்றுமுதல் மரைமலரால் அர்ச்சித்த அன்பர்களுக்கும் திருவாழிக்குமண் பெயர்த்த திவ்விய க்ஷேத்திரமாகிற திருவிற்குடி வீரட்டத்தில் வசிப்பவர்களுக்கும் தடையின்றி வேண்டுவன வெல்லாமீந்து முடிவில் சிவ சாயுஜ்ஜியமளிப்பதாய் வாக்களித்து அந்தர்த்தியானமாகியபின்னர் விஷ்ணுவானவர் வைகுண்டத்தை யடைந்து தனது பரிபாலனகிருத்தியத்தைச் சரிவர நடத்திக் கொண்டு வந்தார்.

இச்சரித்திரத்தை பக்திபூர்வமாய் உள்ளன்போடு படிப்பவர், பலர்கேட்கச்சொல்பவர், இத்தலத்தில் ஒரு பொழுதேனும் வசிப்பவர், அங்கு விளங்கும் பரஞ்சோதியை ஒருதரமேனும் தரிசிப்பவர், முதலிய யாவரும் இப்பூவுலகில் வேண்டிய யாவையும் பெற்று முடிவில் சிவ சாயுஜ்ஜியமடைவார்கள் என்பதற்கு

ஐயமில்லை. என்பதற்கு அடியார்க்கருளும் அபிராமிநேயன் அரவாபரணன் திருவடி சாட்சியென்று புராணம் சொல்லுவதே பெரும் பொழுது போக்காகவுடைய சூதபுராணிகர்நைமிசாரண்யவாஸிகளான எண்பத்தெண்ணுயிரம் முனிவர்களைப்பார்த்துச் சொல்லிக்கொண்டுவந்தார் அப்போது முனிவர்கள் நன்று, நன்று, விற்குடியைப்போல்புண்ணியஸ்தலமும் வீரட்டேஸ்வரரைப்போல் அருள்த்தெய்வமும் ஜலந்தர சம்ஹாரம்போல் திவ்வியசரித்திரமும் எங்கும் கண்டதும்,கேட்டதுமில்லையெனக் கொண்டாடினர்.

"வாழ்க வந்தணர் வானவரா தீனம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரநாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே"

ஓம்தத்ஸத்.

திருச்சிற்றம்பலம்.